சரஸ்வதி

ஆசிரியர். வ. விஜயபாஸ்கரன்



இலக்கிய மாத இதழ். 2

சரஸ்வதி

ஆசிரியர்: வ. விஜயபாஸ்கரன்

திரு. வி. க.—சில நினைவுகள்

கே. இராமநாதன்

மூன்றாண்டுகள் கல்ப காலத்தில் கடுகுப் பிரமாணம் தான். ஆனால் தமிழ்ப் பெரியார் திரு. வி. க.வுடன் நான் நேரடியாக நெருங்கிப் பழகிய இந்தக் காலகட்டம்தான் என் வாழ்வில் தலைசிறந்த காலம். என் உள்ளத்தில் அழியாத பசுமையுடன் குடிகொண்டிருக்கும் பல நினைவலைகளை எழுப்பி உருவாக்கிய காலம். அவரது தெவிட்டாத உரையாடல்களில் தமிழகத்தின் அரை நூற்றாண்டு கால வரலாற்றை நான் கேட்டேன், கண்டேன், கருத்திலும் கொண்டேன்.



1937, 1938, 1939 என்ற மூன்றாண்டுகளில் முதலில் பத்திரிகைக் கலை கற்கும் மாணவனாகவும், பின்னால் உதவி ஆசிரியனாகவும் அவரது நவசக்தியில் பணியாற்றும் பேறு எனக்குக் கிட்டியது. அவரது நட்புறவையும், அவருடன் சேர்ந்து சேவை புரிவதையும் இந்தப் பேற்றினும் அரும்பெரும் பேறாகக் கருதினேன்.

மேதை, ஒரு வயிரச் சுரங்கம், வெட்ட வெட்ட முட்டாது கொடுக்கும் செல்வக் குன்று, அறிவாற்றல் என்னும் சாணையால் என்றென்றும் தீட்டப் பெற்று ஒளி வீசும் அமர ஜோதி. திரு. வி. க. அத்தகைய ஈடும் இணையுமற்ற மேதை. பகைவன் என்று ஒருவர் கூட இல்லாத பத்தரை மாற்றுத் தங்கம்.

புகழ் என்பது கூட்டத்தின் கைதட்டலல்ல! ஜே! வாழ்க! என்ற கோஷங்களல்ல. ஆனால் இறவாது அழியாது மனிதஜாதியின் உள்ளத்திலே நித்ய நிரந்தரமாகக் கோயில் கொண்டிருக்கும் ஒப்பற்ற ஒரு உன்னத உணர்ச்சி. இத்தகை முடிவிலாக் கீர்த்தியின் முடிசூடா மன்னனாக திரு. வி. க. திகழ்ந்தார். கலங்கரை விளக்கம் போலப் பிறருக்கு

இலக்கியமாகவும் வழிகாட்டியாகவும் வாழ்ந்த அவரது வாழ்க்கையில் நிகழ்ந்த இரண்டு சிறு சம்பவங்களை எடுத்துக் கூறி எனது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

* * *

மாகாண சுயாட்சியின்கீழ் காங்கிரஸ் ஆட்சி நடைபெறும் காலம். "விண்ணிலிரவி தனை விற்றுவிட்டெவரும்போய் மின்மினி கொள்வாரோ" என்று உண்மைத் தேசபக்தர் உளங் குமுறும் காலம். பள்ளிக்கூடங்களில் கட்டாய ஹிந்தி போதனை நுழைக்கப்பட்டது. அதனால் விளைந்த சோதனை மிகுந்த காலம்.

இரு குரல்கள் அழைக்கின்றன. ஒன்று மொழிப்பற்று என்ற முகமூடிக்குள் ஒளிந்து கொண்டிருக்கும் சாம்ராஜ்ய பக்தர் கூட்டம். தேசிய இயக்கத்தின் விரோதிகள், இனத் துவேஷிகள், பிற்போக்காளர் ஹிந்தி திணிப்பிற்கு எதிராக எழுந்த எழுச்சியிலும் கிளர்ச்சியிலும் முதலெடுக்கும் கூட்டம். தமிழுக்கு ஆபத்து! குதிப்போம் போரில்! வாருங்கள் வெளியே! தமிழறிந்த தலைவரே! தமிழ் நாட்டின் தங்கமே! என்று அறைகூவுகிறது.

மறுபுறம் ஆட்சிபீடத்திலமர்ந்து அதிகார மமதையில் கண்ணவிந்துவிட்ட தேசியத் தலைவர்கள். கட்டாய ஹிந்தியைத் திணித்துத் தவறிழைத்தவர்கள். தேசபக்தியில் முதலெடுத்துத் தமது தவறைத் திறையிட்டு மறைக்க முயல்பவர்கள் கூட்டம். தேசம் அழைக்கிறது! வாருங்கள் வெளியே! சோதனைமிக்க இந்த கட்டத்தில் எங்கள் பக்கம் இருப்பதாகப் பிரகடனம் செய்யுங்கள்! என்று தூதனுப்புகிறது, வேண்டுகோள் விடுக்கிறது.

திரு. வி க.வின் நிலை என்ன? இரு தரத்தார்களின் வளமையும் வள்ளலும் அவருக்குத் தெரியும். மலை முகட்டில் - மணிக்கூண்டில் ஏறி நின்று பார்க்கிறார். கத்தி மேல் நின்று கழைக்கூத்தாடுவதா? ஊசலாட்டத்தின் ஒப்பாரியை மீட்டுவதா? தயவு தாட்சண்யத்திற்காக தயக்க மயக்கம் கொள்வதா? சிலர் போற்றுவார்கள் என்பதற்காகக் காற்று வாக்கிலே தாவுவதா? வேறு சிலர் தூற்றுவார்கள் என்பதற்காக பெரிய லட்சியங்களைப் புறக்கணிப்பதா? இந்தச் சரிவுப் பாதைகள் எதிலும்அவர் சரிந்துவிடவில்லை, வழுக்கிச் சாய்ந்துவிடவில்லை.

குன்றென நிமிர்ந்து நின்றார். குணதோஷங்களைக் கண்டார் கண்டபடி விண்டார். விமர்சனம் செய்தார். "கட்டாயம் வேண்டாம்" என்ற மகுடத்தோடு 'நவசக்தி'யில் தலையங்கம் தீட்டினார். கட்டாயம் என்பதுதான் விஷச் சக்கரத்தின் வேர் என்று அவர் துலாம்பரமாகக் கூறினார். ஆட்சி பீடம் கலகலத்தது. தமிழகத்தின் வரலாறு அறியாத சில கற்றுக்குட்டி "தேசபக்தர்கள்" திரு. வி. க.வைத் தூற்றினார்கள். 'உள்ளுக்குள் ஜஸ்டிஸ்

ஆசாமிதான்' என்று கூசாமல் குறைகூறி நிந்தனை செய்தார்கள். அவர் கவலைப்படவில்லை. இடி முழக்கத்தில் மூஞ்சூறு கத்தினால் கவலைப்படுவாருண்டோ?

பெரியார் ஈ.வே.ரா. கைது செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டார். "முதியவர் சிறைவாசம்" என்ற தலைப்பில் திரு. வி. க. ஓர் உருக்கமான தலையங்கம் எழுதினார். ராஜாஜி, ஈ.வே.ரா. இருவரும் பொதுவாழ்வில் ஈடுபட்ட நினைவலைகளைக் குறிப்பிட்டு, கண்ணன் காட்டிய வழியைச் சுட்டிக்காட்டி நெஞ்சத்தைத் தொடும் சொல்லோவியம் தீட்டினார். இப் பிரச்சினையில் பிடிவாதங் காட்டாமல் சுமுகமாகத் தீர்க்கலாகாதா? என்ற தமது வேண்டுகோளை விரிவுரை செய்தார். வேதாளம் மரத்தை விட்டு இறங்கவில்லை.

மறுபுறம் 'ஹிந்தி எதிர்ப்பு' கிளர்ச்சிக்காரர்கள் திரு. வி. க. வைத் தாக்க முற்பட்டார்கள். "இவர் உள்ளுக்குள் பார்ப்பனர் கையாள்" என்பது அவர்களது அவதூறின் பல்லவி. இவற்றால் அவர் அலைபடவில்லை, மனங் குலையவில்லை. இந்த விந்தை மனிதர்களின் விசித்திரப் போக்கைக் கண்டு வெட்கினார்; நாட்டுக்குற்ற வேதனை கண்டு மனம் புழுங்கினார்.

திடமான முடிவை, துணிவான தீர்ப்பை அன்று அவர் எடுத்தார். கட்டாய ஹிந்தி நாட்டைப் பிளவுறுத்தும் நாசகாரி எனக் கண்டார். அதை வேண்டாம் என்று அப்பட்டமாக ஐயந்திரிபுக்கு இடமின்றி எடுத்துக் கூறினார். மறுபுறம் ஹிந்தி எதிர்ப்பியக்கத்தின் சூத்ரதாரிகள் சாம்ராஜ்ய தாசர்கள், தேசீய இயக்கத்தின் விரோதிகள் என்பதைக் கண்டார். எனவே எல்லை மீறிய அளவுக்கு ஆத்திரமூட்டப்பட்டும் அந்த இயக்கத்தில் அவர் கலக்கவில்லை. அதற்கு ஆக்கந் தரவில்லை, சரித்திரம் அவரது முடிவு, தலைசிறந்த முடிவு என்று இன்று வரையறுத்துக் கூறிவிட்டது. கண்ணுடையோர் இதைக் காணமுடியும்.

இன்னுமொரு நிகழ்ச்சி! இதே காலகட்டம். காங்கிரஸ் சர்க்கார் தொழிலாளர் கிளர்ச்சிகளை ஒடுக்குகிறது, அடக்குகிறது. துப்பாக்கிப்பிரயோகங்கள் நடக்கின்றன. தேசீயப் பாரம்பர்யங்களும் தொழிலாளருக்கு அளித்த வாக்குறுதிகளும் ஆடிக்காற்றில் அந்தரத்தில் பறக்கின்றன.

அடக்குமுறைச் (கறுப்பு) சட்டங்களை எதிர்த்து சென்னைத் தொழிற் சங்கங்களின் அணிவகுப்பு நடக்கிறது. பல்வேறு கட்சிகளைச் சார்ந்த தலைவர்கள் கண்டனக் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கிறார்கள். ஹைகோர்ட் கடற்கரையில் பிரமாண்டமான கூட்டம். பாசுதேவ் என்ற ஜஸ்டிஸ் கட்சிவாதியின் தலைமையிலுள்ள தொழிற்சங்கமும், செங்கொடிச் சங்கங்களும் ஒரே மேடையில் பொது லட்சியத்திற்காக உட

லெடுத்த ஐக்கிய மேடையில் கூடி நிற்கின்றன.

பல கொடிகள் பறக்கின்றன. மூவர்ணத் தேசீயக் கொடியும் பறக்கிறது. ஒரு சிறு கும்பல் தேசீயக் கொடி கூடாது என்று ஆலோசனை கிளப்புகிறது. விடுதலைப் போராட்டத்தின் சின்னமாக தேசாபிமானத்தின் அடையாளமாகத் திகழும் தேசீயக் கொடி பறந்தேதீரும் என்று பெரும்பாலார் கர்ஜிக்கின்றனர்கள். ஆட்சிபீடமும் அதிகார வர்க்கமும் இந்தக் கூட்டம் குழப்பத்தில் முடியாதா? சிதறுண்டு போகாதா? என்று ஜெபமாலை உருட்டிவருகிறது.

யாரோ ஒருவன் தேசீயக் கொடியைத் தாழ்த்த முயல்கிறன். செந்தொண்டர்கள் சிலர் சீறிப் பாய்கின்றனர். கைகலப்பு ஏற்படலாம். வேற்றுமை வினை விதைக்கப்படலாம். குழம்பித் தளும்பும் கட்டம். உணர்ச்சி அலைகளின் வாய்ப்பட்டுக் கலவரமுற்றுள்ள கட்டுக் கடங்காத ஜனத்திரள். அமைதியை நிலைநாட்ட பல குரல்கள் எழுப்புகின்றன.பயன்தரவில்லை.

திரு. வி. க. மேடைமீது ஏறினர். ஒலிபரப்பி முன்வந்தார். "தேசீயக் கொடி எனக்கு ஜீவன்போன்றது. தொழிலாளர் ஒற்றுமை எனது உயிர் மூச்சு. தாயின் மணிக்கொடி தாழ்வதை சகியேன். தொழிலாளர் ஐக்கியம் குலைவதைச் சகியேன். நம்மிடையே பிரிவோ, பிளவோ பிணக்கோ கூடாது! கூடாது! இத்தகைய சாபக்கேடு நேருமானல் நான் கடலில் பாய்ந்து விடுவேன்" என்றார், மந்திரம் போல் விரையும் இந்த மின் சொற்கள் லட்சக் கணக்கில் திரண்டிருந்த மக்களைப் பரவசத்திலாழ்த்தின. அச்சொற்கள் இன்றும் என் காதுகளில் ரீங்காரம் செய்கின்றன.

ஊசி விழுந்தால் கேட்கும் அமைதி நிலவியது. தேசீயக் கொடியின் கௌரவமும் பாதுகாக்கப்பெற்றது, தொழிலாளர் ஐக்கியம் பாதுகாக்கப்பெற்றது. தேசிய விரோதிகள் முகத்திலே கரிபூசப்பெற்றது. சீர்குலைவாளன் முயற்சி மண் தின்றது. ஆட்சி பீடத்தின் ஆசை நிராசையாயிற்று. அன்றுதான் அந்தக் கம்பீரமான மனிதனின் வசீகர சக்தியை, ஆற்றலை நான் கண்ணாரக் கண்டேன். என் சிந்தையில் அவர் உயர்ந்து உயர்ந்து மேலே மேலே சென்றார். மக்கள் தலைவனின் இலக்கணமும் பண்பாடும் எனக்குத் தெரியவந்தது. இந்த இரு நிகழ்ச்சிகளும் ஆயிரத்தில் இரண்டு. அவர் வாழ்வு முழுதுமே இத்தகைய சம்பவங்களினல் கோக்கப்பெற்ற மணிமாலை தான் என்றல்மிகையாகாது.

" ஆறன் தமிழ்ப் புலவீர், கற்பனையே யானாலும்,
வேதாந்த மாக விரித்துப் பொருளுரைக்க
யாதானுஞ் சற்றே இடமிருந்தாற் கூறீரோ ?"

என்று 'குயில் பாட்டு' காவியத்தின் இறுதியில் கேள்வி போடுகிறான், பாரதி. கீழே அதற்குப் பதில் காண்க. இதுவும் கற்பனை தானே? எப்படியிருந்தாலும் சரி. குயில் பாட்டை ரசித்தனுபவிக்க இது உதவினால் போதும்!

பாரதியும், குயிலும்

ஆர். கே. கண்ணன்

●

செந்தமிழ்ச் செல்வியின் ஆகத்தே பாரதி அணிவித்த மணியாரத்தில் நாம் காணும் சுடர் முத்துக்கள் எத்தனை எத்தனையோ! இவற்றிற்கெல்லாம் நடுநாயகமாயமைந்து, முப்பெரும் மாணிக்கங்களாய் மாண்புறத் திகழ்வனவே, பாரதி சமைத்த காவியங்களான பாஞ்சாலி சபதமும், கண்ணன் பாட்டும், குயில்பாட்டும்.

பட்டைதீட்டிப் பதித்த வைரங்கள் இவை. விரல்களிடையே எடுத்துத் திருப்பித் திருப்பிப் பார்த்துக்கொண்டே யிருக்கலாம். ஒவ்வொரு அசைவிலும் நூறு கோடி வயிரக் கிரணங்கள் வெளிவந்து ஜ்வலிக்கின்றன; ஒவ்வொரு கோணத்திலும் கோடிகோடி வர்ணக் கிரணங்கள் கூடிக் களிநடம் புரிகின்றன. அகக் கண்ணும் புறக் கண்ணும் ஒருங்கே இவ்வொளிப் பிழம்பில் கலந்து, மதி மயங்கி விடுகின்றது.

கவிதா சிருஷ்டிச் சக்தியின் உச்சியை எட்டிய காலத்தில் பாரதி இவற்றைப் படைத்தான். புதுச்சேரியில் 1912ம் ஆண்டுக்குப் பிற்பட்டதொரு குறுகிய காலத்தில் எழுதப்பட்டவை இவை. அவர் நடத்திய பத்திரிகைகளை சர்க்கார் ஒன்றன்பின்னொன்றாக மூச்சையடைத்து நசுக்கியது. நாட்டுடன் ஜீவனுள்ள தொடர்புகள் வைக்கும் வாய்ப்புக்கள் அருகிவந்த காலமது. புதுவையை விட்டு நகரவும் முடியாது; அரசியல் மூச்சு விடவும் முடியாது என்ற நிலைமை பாரதிக்கேற்பட்டது. வறுமைப் பேய் தலைவிரித்தாட ஆரம்பித்து துன்

"கவிதைக் கனிபிழிந்த சாற்றி னிலே, பண்கூத் தெனு
மிவற்றின் சார மெலாம் ஏற்றிஅதனோடே இன்னமுதைத் தான்கலந்து,
காதல் வெயிலிலே காயவைத்த கட்டியினால்
மாதவளின் மேனி வகுத்தான் பிரம னென்பேன்"

இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ் ரூபலாவண்யங்களும் பொருந்திய தீந்தமிழ்ச் செல்வியே அவள்! வேறு யாருமல்ல.

இதுவரை குயிலைக் குயிலாகவே பாவித்து கதையில் மனத்தைப் பறிகொடுத்து வந்த நாம், மீட்டும் குயிலின் "பூர்வ ஜன்மக் கதை"யைப் புரட்டிப் பார்க்கத் துவங்குகிறோம்.

குயிலின் பூர்வஜன்மக் கதையைச் சொல்பவர், சொல்லத் தகுதியுடையவர், யார்?

"முன்னம் ஒரு நாள் முடிநீள் பொதியமலை
தன்னருகே நானும் தனியே யோர் சோலைதனில்
மாங்கிளையி லேதோ மனதி லெண்ணி வீற்றிருந்தேன்
ஆங்கு வந்தார் ஓர் முனிவர் ஆரோ பெரியரென்று
பாதத்தில் வீழ்ந்து பரவி னேன்; ஐயரெனை
ஆதரித்து வாழ்த்தி யருளினார்"

என்று விவரித்தபின்,

"கூறுகின்றார் ஐயர்: குயிலே! கேள், முற்பிறப்பில்" என்று துவக்கிக் குயிலின் பூர்வ ஜன்மக் கதையை ஐயர் செப், நாம்ப கேட்கின்றோம்.

பொதிய மலைவாழ் தமிழ் மா முனிவனும் அகத்தியரே அருளிச் சொல்கின்றார், குயிலின் பூர்வ ஜன்மக் கதையை!

ஐயரின் மகாத்மியத்தைப் பாரதி வேறொரு சந்தர்ப்பத்திலும் விவரித்துள்ளான். அகத்தியரைக் கனவில் கண்டு நனவில் நிறுத்துவது பாரதிக்குப் புதிதல்ல. பாரதியின் கற்பனையும் கருத்தும் ஒருங்கே கூடும் வைர ஊசி முனைதான் அகத்தியர்; ஏனெனில் அவரே தமிழ். கேவலம், ஒரு வேப்ப மரத்தின் கிளைகளையும் தளிர்களையும்கூட தமிழில் பேச வைக்கும் தவவலிமை பெற்றவர் அவர் என்பதைப் பாரதி யெழுதிய "வேப்ப மரம்" என்ற கட்டுரையைப் படிப்போர் அறிவார்கள். அந்தப் பேராற்றல் படைத்த அகத்தியமாமுனிவர் குயிலின் கதையைத் திரிகால ஞானத்துடன் கூறமுடியாதா என்ன? யோகத் துயிலிலாழ்ந்திருந்த மாமுனிவரைத் தீண்ட கொடிய சர்ப்பம் நெருங்கியதைக் கண்டு துடிதுடித்துப் போன வேப்பமரம் அவரை விழிப்புறச் செய்ய பேசும்வகை தெரியாமல் திகைத்து, இலைகளையும் மலர்களையும் அவர் பாதங்களில் சொரிந்ததும், நித்திரை கலைந்த முனிவர் நச்சரவத்தைக் கழுத்தில் அணைத்து அணிந்து கொண்டு, பேசத் துடிதுடித்து நிற்கும் வேப்பமரத்துக்குத் தமிழ் பேசும் பெற்றினை வழங்கியதும் பாரதி காட்டிய காட்சிதானே!

அப்படியிருக்க, தானுக வணங்கிக் கேட்கும் குயிலுக்கு அதனுடைய பூர்வஜன்மக் கதையைச் சொல்லாமலிருப்பாரோ? பூர்வ ஜன்மக்கதை தொடங்குகிறது.

"...குயிலே! கேள், முற்பிறப்பில்
வில்லுடைய வெந்தொழிலார்
வேடர் குலத் தலைவன்
வீர முருகனெனும் வேடன்
மகளாகச் சேர வள நாட்டில்
தென்புறத்தே ஓர் மலையில்
வந்து பிறந்து வளர்ந்தாய் நீ.
நல்லிளமை முந்துமழகினிலே
மூன்று தமிழ்நாட்டில் யாரும்
நினக்கோர் இணையில்லை
என்றிடவே சீருயர நின்ருய்.."

என்று முனிவர் கூறத் தொடங்குகிருர். நமது கண்ணெதிரே ஒரு நிழலாட்டம் அந்த க்ஷணமே நிகழ்ந்து மறைகிறது......

"சேர வளநாட்டில் தென்புறத்தே ஓர் மலையில்..." என்னும்பொழுது குமரிக்கண்டமும், குமரி மலையும், பெரியாராகிய குமரியாறும், பஃறுளியாறு முதலான பிற ஆறுகளும், தென் மதுரையும், அதனில் வீற்றிருந்து செங்கோலோச்சிய பாண்டியனும் தலைச் சங்கப் புலவர்களும், அதற்கு வடக்கே போந்த சேர, சோழ, மண்டலங்களும் உயிர்த்தெழுந்து நர்த்தனம் செய்கின்றன.

முதற் கடற்கோள் குயிலின் முதற் பிறப்பின் கதைக்கு முடிவு கூறுவது போன்ற பிரமை தட்டுகிறது.

பின்னர் குயிலின் மறுபிறப்பும் கூறப்படுகின்றது:

"...அடி பேதாய், இப்பிறவி
தன்னிலும் நீ விந்தகிரிச்
சார்பிலோர் வேடனுக்குக்
கன்னியெனத்தான் பிறந்
தாய்..."

விந்திய மலைக்குத் தெற்கேயுள்ள பொதிகைமலைச்சாரலிலே கபாடபுரத்தில் வீற்றிருந்து அகத்தியர் குருவும் தொல்காப்பியர் ஆகிய பன்னிரு சீடர்களும் தமிழிலக்கணம் வகுத்து தமிழ் புத்துயிர் பெற்று, இடைச் சங்கத் தமிழாக மாட்சிமை பெற்று விளங்கிய காட்சி மனத் திரையிலே பளிச்சிட்டு மறைகிறது.

இரண்டாம் கடற்கோள், இடைச்சங்கத் தமிழகத்தையும், தமிழ்க்கலைக் கருவூலங்கள் அனைத்தையும் சிதைத்துச் சென்றது. எஞ்சிநின்ற தொல்காப்பியத்தை உயிராகவும், தொகை நூல்களை உடம்பாகவும் கொண்டு சுற்றித்திரிந்து, மூன்ரும் கடற்கோளுக்கும் இரையாகாது கடைச் சங்கத் தமிழுடன் தப்பிப் பிழைத்து தமிழகம் எங்கும் இனிமையைப் பொழிந்து நிறைவு செய்து வரும் கானக் குயிலாக உருவெடுத்தாள் தமிழணங்கு! தமிழகத்தின் உயிருக்குயிரான உண்மைக் கவி மன்னவன்மீது தீராக் காதல் கொண்டு காட்டு மலைகளிலும், சோலைகளிலும் குயில் தேடித் திரிகின்றது.

தமிழ்க் குயிலின்பால் காதல் கொண்டு அலைந்தமாந்தர் பலர்.

"காமன் கணைக்கிரையாய்,
நின்னழகைக் கண்டுருகி,
நின்னை மணக்க
நெடுநாள் விரும்பி, அவன்
பொன்னை மலரைப்
புதுத்தேனைக் கொண்டுனக்
நித்தம் கொடுத்து, [கு
நினைவெல்லாம் நீயாகச்
சித்தம் வருந்துகையில்..."

குயிலி (வேடன் மகள்) தான் என்ன செய்வாள், பாவம்! மாமன் மகனொருவன் அவ்வாறு தனது காதலை வெளியிட்டு வற்புறுத்தியபோது, குயிலி என்ன செய்தாள்?

"நீயவனை
மாலையிட வாக்களித்தாய்..."

குயிலிக்கும் அவன்மீது காதல் உண்டா? அதுதானில்லை!

"...மையலினாலில்லை; அவன்
சால வருந்தல் சகிக்காமல்
சொல்லி விட்டாய்."

அவன் மீதேற்பட்ட இரக்கத்தினால் அவன் பாத காணிக்கையாகச் சமர்ப்பித்த காதலை ஏற்க இசைந்தாள் குயிலி.

மாமன் மகனோடு விஷயம் முடிந்ததா? இல்லை. "தேன் மலையின் சார்பிலோர் வேடர் கோன்" ஒருவன் தன் மகன் நெட்டைக் குரங்கனுக்கு அவளைப் பெண்ணாகக்கொள்ள நிச்சயித்துப் பிறகு அவள் தகப்பனின் சம்மதத்தையும் பெற்றுச் செல்கிறான். இவ்வளவு இக்கட்டான நிலையில் சிக்கிக் கொண்ட குயிலி முதலில் வந்தவனுக்கு என்ன ஆறுதல் மொழி கூறுகிறாள்?

"நெட்டைக் குரங்கனுக்குப்
பெண்டாக நேர்ந்தாலும்
...மாதமொரு மூன்றில்
மருமம் சில செய்து
பேதம் விளைவித்துப்
பின்னிங்கு வந்திடுவேன்;
...நாலிரண்டு மாதத்தே
நாயகனை நின்றனையே
பெற்றிடுவேன்; நின்னிடத்தே
பேச்சுத் தவறுவனோ?
மற்றிதனை நம்பிடுவாய்
மாடப்பா"

என்று குயிலி உரைக்கின்றாள். எதனால்?

"காதலினாலில்லை; கருணையி
னால் இஃதுரைத்தாய்."

இங்கே ஆழ்ந்த சந்தேகம் ஒன்று தலையெடுக்கின்றது. தானே காதலிக்காதிருக்கையில், ஒருவனுக்கு வாக்குத் தத்தம் செய்துவிட்டு இன்னொருவனுக்கு வாழ்க்கைப்படவும் இணங்கி, "கட்டுப்படி அவர்தங் காவலிற்போய் வாழ்ந்தாலும் மாதமொரு மூன்றில் மருமம் சில செய்து" அவனை நீங்கி மீட்டும் முந்தியவனை வந்தடைவேன் என்கிறதே, இந்தக் குயிலி! அதிலும், "காதலினாலில்லை; கருணையினால் இஃதுரைத்தாய்" என்பதும் சரிதானா, விளங்கக் கூடியதா? பெண்மை இலக்கணத்துக்கும் மாண்பு மரபுகளுக்கும் எப்படிப் பொருத்தமுடையது?

சாதாரணப் பெண்ணாயிருந்தால் இந்தக் கேள்வி முறையானதுதான். ஆனால் குயிலி அப்படிச் சாமானியமானதொரு பெண்ணா? தமிழணங்கு அல்லவா அவள்? அவர்கள் எல்

லோரும் தனக்குநிகரில்லைதான், தனது காதலுக்குத் தகுதி மற்றோர்தான். என்றாலும் அவர்கள் அவளைக்காதலிப்பதை தான் எப்படி நிராகரிக்கமுடியும், அவர்கள் தனது பாத கமலங்களில் சமர்ப்பிக்கும் காதலை-அதாவது, கவிதைகளையும், நூல்களையும்-தான் எப்படி நிராகரிப்பாள்? சிறந்த நூல்கள் மட்டுமா அவளது சேவடியைச் சேவிக்க வருகின்றன? தரங்குன்றிய நூல்களும் கூடை கூடையாய் வந்து விழத்தானே செய்கின்றன? அவற்றை எப்பொழுதாவது அவள் நிராகரித்ததுண்டா, அல்லது அவர்களாவது அவளை தொந்தரவு செய்யாது விட்டு விட்டதுண்டா? பாவம், அவர்களுடைய காதலுணர்ச்சியைக் கண்டு இரக்கம் காட்டாமலிருக்க முடியுமா? அவர்களையும் உற்சாகப்படுத்தி மேன்மை பெறச் செய்யவேண்டியிருக்கிறதே?

அவள்மீது குற்றமில்லை; அவர்கள் மீதும் குற்றமில்லை. தமிழணங்கின் நிலையே அதுதான்! எல்லோரும் இரக்கப்பட வேண்டிய நிலைமை! என்மீது ஐயம் கொள்ளாதே" என்று உண்மைக் காதலனிடம் குயில் வாய்விட்டுச் சொல்லவேண்டிய நிலைமையில், இறுதிக்கட்டத்தில் குறிப்பிட்டுணர்த்த வேண்டி நேரிட்டு விடுகிறதே!

"...ஐயோ, திருவுளத்தில்
எப்படி நீர் கொள்வீரோ
யானறியேன், ஆரியரே!
காதலருள் புரிவீர்..."

என்று அரற்றுகிறாள், உண்மைக் காதலனின் கையில் விழ்கிறாள், தஞ்சமடைகின்றாள்.

மாமன் மகனும், நெட்டைக் குரங்கனும் போகட்டும். மூன்றாமவன் ஒருவன்—"வேட்டைக்கெனவந்தான் வெல்வேந்தன் சேரமான் தன்னருமை மைந்தன்"—இடையே வருகிறானே? அவன்பால் அவளது உள்ளமும் சித்தமும் எப்படி? பளிரென்று விடை கிடைக்கிறது, ஐயத்திற்கிடமின்றி:

"..............மாது நீ
மன்னவனைக் கண்டவுடன்
மாமோகங் கொண்டுவிட்டாய்
நின்னையவன் நோக்கினான்;
நீயவனை நோக்கி நின்றாய்;
என்ன நிகழ்ந்தது உடனே?
"அன்னதொரு நோக்கினிலே
ஆவி கலந்துவிட்டீர்!"

அந்த ஒரு நோக்கோடு சரி, ஆவி கலந்து விட்டார்களாம்! உண்மைக் கலைஞன்பால் தமிழணங்கு கொள்ளும் காதல் இது. காதலனின் வேண்டுதலுக்குக் காத்திருத்தல் இல்லை; தகப்பன் சுற்றத்தார் நிச்சயதார்த்தப் பேச்சுக்கள் தேவையில்லை. மூன்றாம் பேர்வழியின் போக்குவரத்து இன்றி அந்த நொடியில் முடிகிற சங்கற்பம் இது. ஏதோ, பூர்வ ஜன்மங்களிலிருந்தேஇருவரும் இடையறாது உள்ளத் தொடர்பு கொண்டிருந்து, சந்தித்த மாத்திரத்தில் ஒன்று கலந்த மாதிரி ஒரு உணர்ச்சி நமக்கு ஏற்படுகிறது. உண்மைக்கவிகள்அப்படித்தான் ஒவ்வொரு காலத்திலும் "பூர்வ ஜன்ம வாசனை" பெற்றிருக்

கிறார்களோ? கம்பனே பாரதி, பாரதியே கம்பன்தானே? வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு உருவமெடுத்தாலும் உண்மைக் கவிகளின் உயிர் ஒன்றேதானே? அவர்களைப்பற்றி தமிழ்க் கன்னிக் குயிலுக்கு அறிமுகமும் முன்னறிவிப்பும் தேவையில்லையாம்!

பிறகென்ன? மாடனும், நெட்டைக்குரங்கனும் தமிழணங்கைக் குயிலாக்கி, "மோசம் மிகுந்த முழுமாயச் செய்கை பல செய்து, பல பொய்த் தோற்றங் காட்டித் திறல் வேந்தன் (உண்மைக் கவி) ஐயமுறச் செய்துவிடும்" நிலைமை ஏற்பட்டால்தானென்ன? பொய்த் தோற்றங்கள் அனைத்தும் இந்தப் பழங் காலத்துத் தொந்தத்தை எத்தனை நாட்களுக்குத்தான் தடுத்துவரமுடியும்? கடைசியில் அவை அத்தனையும் வீணாய்விடுகின்றன.

அப்புறம் நிகழ்வதைப் பாருங்கள்:

"அன்புடனே யானும் அருங்குயிலைக் கைக்கொண்டு
முன்பு வைத்து நோக்கியபின் மூண்டுவரும் இன்பவெறி
கொண்டதனை முத்தமிட்டேன். கோகிலத்தைக் காணவில்லை.
...பெண்ணொருத்தி அங்கு நின்றாள்..."

தமிழ்க் கன்னியைத் தழுவி விட்டான் பாரதி, கடைசி கடைசியாக.

எத்தனை எத்தனை தடவை இவ் ஈடுபாட்டிற்கென்று தமிழணங்கை பாரதி துதிபாடியிருக்கிறான், முன்பெல்லாம்? இந்தப் பேரின்பப்பேறு கிட்டினதில்லை.

'மூன்று காதல்" பாட்டில் பாரதி பட்ட பாட்டைப் பாருங்கள். "விழிக் கோணத்திலே நகை காட்டிச் செல்வாள்" முன்பெல்லாம்! "இளம் புன்னகை பூத்து மறைந்து விடுவாள், அம்மா!" முன்பெல்லாம்.

இருந்தபோதிலும்,

"........அவளிடை
வைத்த நினைவையல்லால்
—பிற
வாஞ்சை யுண்டோ?..."

நீண்ட காலத்திய அந்தக் காதல் இப்போது பூர்த்தியடைகிறது. குயில்பாட்டின் கருத்தழகும், வடிவழகும் அதற்கு நேரடிச் சான்று அல்லவா? இந்தக் காதலின் வாய்மையை நிதர்சனமாக்கும் பாக்கியம் "குயில்பாட்டுக்கு" வாய்த்தது தற்செயல் நிகழ்ச்சி என்று நினைக்கிறீர்கள்?

குயிலி மானிடரைத் தேடித் திரிகின்றாள் மாஞ்சோலையில்! மாடும், குரங்கும் அவளது குறியில்லை......

கவிஞனும் குயிலைத் தேடித் திரிகின்றான் மாஞ்சோலையில், தேன்மலையில், சஞ்சீவ பர்வதத்துச் சாரலில்......

இருவரின் இதய கீதமும் ஒன்றே:

காதல், காதல், காதல்
காதலின்றேல் காதலின்றேல்
சாதல், சாதல், சாதல்.

குயில் பாட்டு! நித்திய நிரந்தர கீதம்! ●

கலை உலகம்

கோமதியின் காதலன்

(பட விமர்சனம்)

நடைமுறை வாழ்க்கையை சித்திரிப்பது என்ற பாதையிலிருந்து விலகிநடந்தால், அந்த கதையில் நம்பமுடியாத, நடக்க முடியாத பல்வேறு சம்பவங்கள் குவிந்திருப்பது சர்வ சாதாரணம்; வெகு சுலபம். அதிலும் அலுங்காமல் குலுங்காமல் சுகவாழ்வு அனுபவிக்கும் பங்களா வாசிகள் என்ருல், அவர்களைப்பற்றிய கதையில் வரும் நிகழ்ச்சிகள் பெரும்பாலும் அபூர்வ அதிசயங்களாக அமைவதில் ஆச்சரியமில்லை.

கதை

பிரபல ஹாஸ்ய எழுத்தாளரரன ஆனந்த விகடன் 'தேவன்' கதையை திரைக்கேற்றபடி சிறிது திருத்தி மாற்றியமைத்து வசனமும் எழுதியிருக்கிருர் 'டைரக்ட்' செய்த ப. நீலகண்டன். இருநூறு ரூபாய் மதிப்புள்ள சிறுநிலத்தின் உரிமைக்காக தீராப் பகைவர்கள் ஆகின்றனர் முல்லைவாசல், சின்னவேலி ஜமீந்தார்கள். அண்ணனுடன், தந்தையில்லாத சமயத்தில், சண்டை போட்டுக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறிய சின்னவேலி ஜமீந்தாரின் இளையமகன் ராஜன் (டி. ஆர். ராமச்சந்திரன்)தன் குடும்ப வைரியான முல்லைவாசல் ஜமீந்தாரின் மகளான கோமதி (சாவித்திரி)யைக் கண்டு, கண்டதும் காதல்கொண்டு, அவளை அடைய ஆசைப்பட்டு, சென்னையில் அவள் தங்கியிருக்கும் வீட்டின் சொந்தக்காரரான படுகஞ்சன் திருவாளர் எள்ளுப்(சாரங்கபாணி) பிள்ளையிடம், ராமு என்ற புதுப்பெயருடன் கார் டிரைவராக வேலைக்கமர்கிருன். அதே சமயத்தில், ராஜனின் பெட்டியைத் திருடி, அதிலிருக்கும் அவனுடைய டைரியின் மூலம் அவனது நிலைமையைத்

தெரிந்துகொண்ட ரௌடி மணி (தங்கவேலு), சென்னையிலிருக்கும் (ராஜனின்) மாமன் வீட்டிற்கு சென்று, தன்னை நேராக அறிமுகப்படுத்திக்கொண்டு திருவிளையாடல்களை ஆரம்பித்து, எள்ளுவின் ஏகபுத்திரியான அரைப் பைத்தியம் சுந்தரி (சுசீலா)யைக் கல்யாணம் செய்து கொள்வதற்கான கட்டம்வரை சென்று விடுகிறான். இதற்கிடையில், உண்மை ராஜனை ராமு, எங்கே தன் வேஷத்தைக் கலைத்துவிடுவானோ என்ற பயத்தினால், அவனை, எள்ளுவின் வீட்டிலிருந்து விரட்ட பலத்த முயற்சி செய்து, சந்தர்ப்பத்தின் துணையால் திருடனாகவும் காட்டிவிடுகிறான். முதலில் அதை நம்பாது, முடிவில் அதை ஏற்றுக்கொண்ட கோமதி தன் காதலனை ஏசிப் பேசி, அவனை தன் மனதிலிருந்து நீக்க முயற்சிக்கிறாள். கடைசியில், ஜமீன்தாரின் உண்மையான மகன் ராமுதான், மணியல்ல என்று ஊர்ஜிதமாகிறது. கோமதி–ராஜன் திருமணத்துடன், பழம் பகை தீர்ந்து இரண்டு ஜமீன்தாரர்களும் நண்பர்களாகவும், உறவினர்களாகவும் ஆகின்றனர்.

நடிப்பு

சிறந்த, ஹாஸ்ய, குணச் சித்திர நடிகரான ராமச்சந்திரன், தன் சொந்தப் படத்தில், உயிர்த் துடிப்பு இல்லாமல், உணர்ச்சிகளைப் பிரதிபலிக்காத முகபாவத்துடன், மோசமாக நடித்திருப்பதைக் கண்டு வருத்தம்தான் ஏற்படுகிறது. சாரங்கபாணி, ஏதோ கொஞ்சம் ஓடியாடி தன் பாகத்தைப் பூர்த்தி செய்திருக்கிறார். தங்கவேலு, ரத்தக் கண்ணீர் ராதாவைக் காப்பியடிக்க முயற்சி செய்து தோல்வியடைவதுடன் மட்டும் நில்லாது, தன் உண்மையான நடிப்பையும் இழந்துவிட்டார். இரண்டு பாலசுப்ரமண்யங்களும், கே. டி. சந்தானமும் பரவாயில்லை. பிரண்ட் ராமசாமி, பி. டி. சம்பந்தம், சாயிராம், நாராயண பிள்ளை, சிவசூரியன்—சராசரிக்கும் குறைவாக இருக்கின்றனர். நடிப்பதற்கு நிறையக் கட்டங்கள் கிடைத்திருந்தும், நடனம் ஆடி, தன் நல்ல பெயரை இழந்துவிட்டார். 'தேவதாஸ்' தந்த சாவித்திரி. நடிப்பதாக நினைத்துக்கொண்டு 'ஐஸராகுண்டு' முத்துலட்சுமி குஷியாகக் கூத்தடித்திருக்கிறார். அரைப் பைத்தியமாக வரும் சுசீலா, நடிப்பதில் சிறிது முன்னேறியிருக்கிறார். நடிக்கத் தெரிந்த நட்சத்திரங்கள் நிறைய இருந்தும், டைரக்டரின் திறமைக் குறைவினால், மங்கிவிட்டனர்.

இசை

ராமநாதனின் இசையமைப்பு காதைத் தொடுகிறதே தவிர நெஞ்சில் பட்டுப் பதியவில்லை. ஜிக்கி, லீலா, ரத்தினம், கோமளா போன்றவர்கள் பாடியும் பாட்டுகள் இனிமையாக இல்லை. சீர்காழி கோவிந்தராசனின் நல்லகுரலோசை இரண்டு

பாட்டுகளுக்கு—'தெள்ளித்தரும் தினைமா', 'வானமீதில் நீந்தியோடும் வெண்ணிலாவே'—உயிர் கொடுத்திருக்கிறது. 'மின்னுவதெல்லாம் பொன்னென்று எண்ணி' என்று துவங்கும் இருகுரல் இசை ஆரம்பத்தில் நன்ருக இருந்து, முடியும்போது கவர்ச்சியை இழக்கிறது.

நடனம்

ராகினி, சாவித்திரி பங்கேற்கும் அம்பிகாபதி இசைநாட்டியம், சம்பந்தமில்லாமல் எடுத்த எடுப்பிலேயே பலவந்தமாக திணிக்கப்பட்டதினுல் ரசிக்க முடியவில்லை. ஸாயீ, சுப்புலெட்சுமி ஆடும் தில்லானுவும் படத்தின் முடிவில், எப்பொழுது வெளியே போகமுடியும் என்று எரிச்சலோடு காத்துக்கொண்டிருக்கும் நேரத்தில் இருப்பதினுல், நன்ருக இருந்தும் பாராட்டை இழந்துவிடுகிறது.

பொதுவாக, படம் நன்ருக இருக்கும், இருக்கலாம், இருக்கவும் முடியும் என்று எதிர்பார்த்து நம்பிக்கையுடன் செல்பவர்களுக்கு பட்டைநாமம் தீட்டிவிடுகிறது 'கோமதியின் காதலன்'.

○

இரண்டு ஹிந்தி படங்கள்

வசூல் குறையாது, வருமானம் சுருங்காது - ஆனுல், அதே சமயத்தில் புதுமையும் விறுவிறுப்பும் கலந்த கதையை மக்கள் முன் திரைச்சித்திரமாக நிறுத்தவேண்டும் என்ற எண்ணத்துடன் தயாரிக்கப்பட்ட படங்கள்தான் "ஸர்தார்" (அசோக்குமார், பினுராய் நடித்தது). "ஹௌஸ் நெம்பர் 44" (தேவ் ஆனந்த், கல்பனு கார்த்திக் நடித்தது.) உயிர்த் துடிப்பும், ரத்த ஓட்டமும் இல்லாததினுல், தோல்விப் பட்டியலில் இரண்டும் வெகு சுலபமாக இடம் பெற்றுவிட்டன என்று துணிந்து சொல்லலாம்.

கொள்ளை, கொலை ஆகிய தீச்செயல்களுடன் நல்லுணர்வாகிய காதலையும் கலந்து, கடைசியில் சுபமாக முடிகிற கதை, இரண்டிற்கும் பொதுவானது.

ஸர்தாரில், கள்ளமறியா உள்ளங்கொண்ட கிராமப் பெண்ணாக வரும் பினுராய், மற்றொரு படத்தின் கதாநாயகியாகத் தோன்றும் கல்பனு கார்த்திக்கைவிட, நன்ருக, தெளிந்த முகபாவத்துடன் நடித்திருக்கிருர். அசோக் குமாரைவிட தேவ் ஆனந்தின் நடிப்பில்தான் (அதுவும், படத்தின் பிற்பகுதியில்) ஓரளவு ஜீவன் இருக்கிறது.

ஹிந்திப் படங்கள் என்ருல், மனதில் பதியக்கூடிய, உதடுகளை அசைக்கவைக்கும், எளிய, இனிய மெட்டில் நாலைந்து பாட்

டுக்களாவது இருக்குமென்று தமிழ்நாட்டு ரஸிகர்கள் எதிர் பார்ப்பது இயற்கை. ஆனால், இந்த விஷயத்தில் இரண்டும் நன்றாக ஏமாற்றிவிட்டன.

'டாக்ஸி டிரைவர்' மூலம் நம் நெஞ்சைக் கவர்ந்த பர்மன் 'ஹௌஸ் நெம்பர் 44-ல்' சங்கீத அமைப்பாளராக இருந்தும்-அவருக்குப் பக்கபலமாக, முதுகெலும்பாக இன்சுவைத்தேன் குரல் கொடுக்கும் லதா, ஆஷா இருந்தும்-உள்ளத்தைத் தொட்டிழுக்கும் பாட்டுக்கள், அதில் இல்லையென்றால், ஸர்தாரைப் பற்றி சொல்லவும் வேண்டுமா?

காமிரா - ஸர்தாரில் சுமார். ஆனால், 'ஹௌஸ் நம்பர் 44-ல்' வெளிப்புறக் காட்சிகள் நன்றாக, உயர்ந்த முறையில் படம் பிடிக்கப்பட்டிருக்கின்றன.

மொத்தத்தில், படம் ஓடவில்லை, படுத்துவிட்டது.

—ப. நா.

★

வரலாற்றில் அக்டோபர்

1-10-1949: சீன மக்கள் குடியரசு பிரகடனமானது.

2-10-1869: இந்தியரை வாழ்விக்க வந்த மகாத்மா காந்தி பிறந்தார்.

8-10-1936: புகழ்பெற்ற உருது எழுத்தாளர் பிரேம்சந்த் காலமானார்.

13-10-1924: பிரெஞ்சு எழுத்தாளர் அனதோல் பிரான்ஸ் காலமானார். இவரது நாவல்கள் உலக மொழிகள் எல்லாவற்றிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

14-10-1954: பரத நாட்டியத்திற்கு புத்துயிரளித்த பந்தணை நல்லூர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை காலமானார்.

16-10-1799: ஆங்கில ஆட்சிக்கு எதிராக போர் நடத்திய வீரத் தமிழன் கட்டபொம்மன் கயத்தாற்றில் தூக்கிலிடப்பட்டார்.

16-10-1951: பாகிஸ்தான் நாட்டை உருவாக்கிய தலைவர்களில் ஒருவரும், பாகிஸ்தான் பிரதம மந்திரியுமான லியாகத் அலிகான் படுகொலை செய்யப்பட்டார்.

18-10-1931: அமெரிக்க விஞ்ஞானி தாமஸ் ஆல்வா எடிசன் காலமானார். கிராமபோன், மின்சார விளக்கு, சினிமா போன்ற நவீன சாதனங்கள் பலவற்றைக் கண்டு பிடித்தவர் இவர்தான்.

நமது தமிழ் நாடு—2.

திண்ணைப் பள்ளிக்கூடம்

★

வ. ரா.

எனது மூன்று வயதில், எங்கள் ஊர்தான் தமிழ் நாடாகக் கண்ணில் பட்டது. எனது ஒன்பது வயதில், தமிழ் நாட்டின் நான்கெல்லை விரிவடைந்து போய் விட்டது. எங்களூரிலிருந்து ஒருமுனையில் பாபநாசம் வரையில் இன்னொரு, முனையில் ராமேசுரம் வரையில் தமிழ் நாடு நீண்டு அகன்று பெருத்துப் போய்விட்டது.

பாபநாசத்துக்கு அருகே, உத்தமதானபுரம் என்ற சிறு கிராமம் இருக்கிறது. தக்ஷிண கலாநிதி உ. வே. சாமிநாதையர் அவர்கள் பிறந்த கிராமமா என்று நீங்கள் மனதுக்குள்ளே கேட்டுக் கொள்ளுகிறீர்கள். இல்லையா? அதே ஊர்தான். அந்த ஊருக்கு நான் படிக்கப் போனேன்.

ஏதோ சர்வ கலாசாலைக்குப் படிக்கப் போன பெருமையோடு ஓர் இளைஞன் பேசுவது மாதிரி பேசுகிறீர்களே என்று யாரும் என்னைக் கேட்க வேண்டாம். உத்தமதானபுரம் என்றாலே போதும், இன்றைக்கும் என் உடம்பு நடுநடுங்குகிறது.

நான் அந்த ஊருக்குப் படிக்கச் சென்றது (ஐந்து வயதிலே) பிரமாதமான பள்ளிக்கூடம் அல்ல. திண்ணைப் பள்ளிக்கூடம்தான். வாத்தியாரையும் திண்ணைப்பள்ளிக்கூடத்தையும் நினைத்துக்கொண்டால், புலவர்களும் பாவலர்களும் போற்றுகின்றது நமிழ்நாட்டைத்தானா என்று எனக்கு, சந்தேகம் வருகின்றது.

சுமார் ஐம்பது வருஷத்துக்கு முன், தமிழ்நாடு எப்படி இருந்தது என்பதற்கு, திண்ணைப் பள்ளிக்கூடம் ஒரு சாம்பிள்-பள்ளிக்கூடத்துக்கு, தனிக் கட்டிடம் கிடையாது. அது, வாத்தியார் வீட்டுத் திண்ணையிலே இருக்கும்.

எங்கள் பள்ளி, கிழக்குப் பார்த்த வீடு. நீண்டு ஒடுங்கின திண்ணையாதலால், காலை 12 நாழிகை வரைக்கும் வெய்யில் கொளுத்தித் தள்ளிவிடும். குழந்தைகள் அதைப் பொறுத்துக் கொண்டுதான் இருக்க வேண்டும்.

"சுமார் ஐம்பது வருஷத்துக்கு முன், தமிழ்நாடு எப்படியிருந்தது என்பதற்கு திண்ணைப் பள்ளிக்கூடம் ஒரு சாம்பிள்" என்கிறார் அமரர் வ. ரா. 'நமது தமிழ்நாடு' என்ற தலைப்பில் 'சக்தி'யில் எழுதிய கட்டுரைத் தொடரில் இரண்டாவது கட்டுரை இது. முதல் கட்டுரையை முன்னரே பிரசுரித்திருக்கிறோம்.

வாத்தியார் பள்ளிக்கு வருமுன்னரே, பிரம்பு வந்துவிடும். வாத்தியாரின் 'செங்கோல்' பிரம்புதானே? வாத்தியார் வரும் வரையில், சட்டாம்பிள்ளை ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருப்பான். பையன்களுக்குள் பெரிய வகுப்பில் படிக்கும் மோட்டாப் பேர்வழியாகப் பார்த்து, வாத்தியார் சட்டாம்பிள்ளையை நியமிப்பார்.

இவன் செய்யவேண்டிய, அல்லது வழக்கமாகச் செய்யும் வேலை, கோள் சொல்லுவதும் சிறு பையன்களை அடிப்பதும் தான். கோள் சொல்லும் முறைக்கு 'கொட்டம்' எழுதுவது என்று பெயர். கொட்டத்தை எழுதி, வாத்தியார் வந்ததும், சட்டாம்பிள்ளை சமர்ப்பிப்பான்.

'கொட்டம்' எழுதுவது என்றால் இதுதான். ஒருவரும் பேசக்கூடாது, சேஷ்டை செய்யப்படாது என்று சட்டாம்பிள்ளை மாமூலாக உத்தரவு போடுவான். இதை மீறி நடப்பதாக அவன் புத்திக்குப் படும் பேர்வழியின் பேரில், 'கொட்டம்' எழுதுவான். அநேகமாக, அவனுக்கு வேண்டாதவர்களின் பேரிலே தான் 'கொட்டம்' விழும்.

முதல் குற்றத்துக்கு, 'கொட்டம்' என்று எழுதுவான். அதே பையன், மறுபடியும் 'கொட்டம்' பண்ணினால், 'கண கொட்டம்' என்று எழுதுவான். பிறகு 'கண கண் கொட்டம்'. இவ்வாறே போய்க் கொண்டிருக்கும். வாத்தியார் வந்ததும், இந்தக் 'கொட்ட' ஜாப்தாவை, ஒழுங்காகச் சட்டாம்பிள்ளை படிப்பான்.

இதற்கு வாத்தியார் சரியான சன்மானம் கொடுப்பார். கொட்டத்துக்கு, பிரம்படி. இதற்கு, திண்ணைப்பள்ளி பாஷையில் பிரப்பம் பழம் என்று பெயர். நல்ல, கனிந்த பழமாக, மூன்றுக்குக் குறையாமல், வாத்தியார் கொடுத்து விடுவார். கை சிவந்து போகிற கொடுமையிலே, ரேகைகளைக்கூட, அது மறைத்து விடும்.

குழந்தைகள், ஒரு பழத்தை வாங்கிக்கொண்டதும், பஞ்சைப் போன்ற தங்கள் மிருதுவான கையை, தொடைப் பக்கத்தில் துணியில் வைத்து ஒத்திக் கொண்டு, வலி பொறுக்க முடியாமல், கதறும் காக்ஷி மிக்க பரிதாபமானது.

வாத்தியாருக்கு, இதைப் பற்றிக் கவலையே கிடையாது. 'அடியாத மாடு படியாது' என்று உளறிக் கொண்டே யிருப்பார். குழந்தைகளை, 'மாடு' என்று அழைக்கக் கூடிய மனோபாவமும் மடமையும், திண்ணைப் பள்ளி வாத்தியாரின் பிரத்தியேக உரிமை என்று நான் உங்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமா?

கொட்டத்துக்குப் பிரப்பம் பழம்; கொட்டத்துக்கு முன், 'கண' வந்து குதித்தால், அதை ஏன் கேட்கிறீர்கள்? கொக்குப் பிடித்தல் என்று ஒரு வகை

தண்டனை. நாற்காலி போடுதல், இன்னொரு வகைத் தண்டனை; கோதண்டம் என்பது மிகவும் கடுமையானது.

கொக்குப் பிடித்தல் :—வலது கையின் ஆள் காட்டி விரலை, தரையில் ஊன்றிக் கொண்டு, ஒரு காலை, தரையில் படாமல் வைத்துக்கொண்டு அவஸ்தைப் படும் நிலைக்கு, கொக்குப் பிடித்தல் என்று பெயர்.

நாற்காலி போடுதல்:- சுவரில் சாய்ந்து நின்று கொண்டு ஒரு காலைத் தரையில் வைத்துக் கொண்டு, வளைந்து நிற்கும் தொடையின் பேரில், இன்னொரு காலைப் போட்டால், அது நாற்காலி மாதிரி இருக்குமல்லவா? இந்த நாற்காலியில், ஒரு பையனையும் உட்கார வைத்துவிடுவார் மகானுபாவரான வாத்தியார்.

கோதண்டம் :— உத்தரத்தில், இரண்டு கைகளையும் சேர்த்துக் கோத்துப் பிடித்துக் கொண்டு, தொங்கிக்கொண்டு இருக்க வேண்டும். கால்கள் தரையில் படக்கூடாது. பட்டால் குத்தும் படியாக, எழுத்தாணிகள், கூர் உள்ள பக்கம் மேலே இருக்கும் படியாக, தரையில் சொருகப்பட்டிருக்கும்.

கோதண்டம் போடுகிற சித்திரவதையைக் கண்டு, வாத்தியாரின் மனம் இரங்காததில் ஆச்சரியமே இல்லை. தெருவிலே போகிறவர்கள்கூட, இதைப் பற்றிக் கவலைப்படமாட்டார்கள். 'அடியாத மாடு படியாது' என்று அவர்களும் வாய்க்குள்ளேயே, சொல்லிக்கொண்டு போவார்களோ, என்னவோ?

இன்னொரு தண்டனையும் உண்டு. முட்டிக்கால் தோப்புக் கரணம். சாதாரணத் தோப்புக் கரணம் அவ்வளவு கஷ்டமான வேலை அல்ல. முட்டிக்கால் தோப்புக்கரணத்தில், 'முழங்கால் 'சில்' தூள் தூளாகப் போகிற மாதிரி இருக்கும்.

இத்தனை சித்திரவதை அமைப்புகளுடன் இருக்கும் பள்ளியில், குழந்தைகள் பயிலும் வித்தையைப் பற்றிச் சொல்ல வேண்டியதேயில்லை. குழந்தைகளுக்கு, படிப்பிலே, ருசியே ஏற்படுகிறதில்லை. சட்டாம் பிள்ளையின் தயவை எப்படியாவது சம்பாதித்துக்கொண்டு, கொட்டத்துக்குத் தப்பிக்க வழி தேடுவது தான் குழந்தைகளின் முயற்சியாக இருக்கமுடியும் என்று சொல்லவும் வேண்டுமா?

குழந்தைகளுக்கு, பள்ளிகளில் தான் யாதொரு சலுகையும் இல்லையே, வீட்டிலேயாவது அவர்கள் சரியாகக் கவனிக்கப் படுவார்களா? வாத்தியார் அடித்தார் என்று வீட்டிலே போய்ச் சொன்னால், அங்கேயும், 'பிரகரம்' (அடி) கிடைக்கும். இல்லாவிட்டால், "நீ ஏதாவது குறும்பு பண்ணியிருப்பே! அதுக்காக வாத்தியார் அடிச்சிருப்பாக" என்று வாத்தியார் செய்ததை, அணைத்துப் பேசுவார்கள்.

உத்தமதானபுரத்துத் திண்ணைப் பள்ளியைப் போலவேதான், தமிழ்நாடு முழுதி

லும் இருந்திருக்க முடியும். ஐம்பது வருஷங்களுக்குமுன், ஆண் குழந்தைகளை வாழ்க்கைக்குத் தயார் பண்ணின முறையை நினைத்துக்கொண்டால், பகீர் என்கிறது.

திண்ணைப்பள்ளிப் படிப்பைக் கொண்டு,என்ன செய்யமுடியும்? உயர்ந்தால், கிராமக் கணக்கன் வேலையைப் பார்க்கலாம். இல்லாவிட்டால் பெட்டிஷன் எழுதலாம். கொஞ்சம் கொஞ்சம் இங்கிலீஷ் தெரிந்தால், குமாஸ்தா ஆகலாம்; அதிலும் ரிஜிஸ்தர் ஆபீஸ் குமாஸ்தா ஆகலாம்.

அக்காலத்தில் தமிழ் நாட்டில் இருந்த பெரியார்களைப் பற்றி நினைக்கும் பொழுது, ரொம்பவும் ஆத்திரம் வருகிறது. வாய்ப்பாடு, குழிமாத்து, கீழ்வாய் லக்கம், குமரேச சதகம், நன்னெறி, நீதி வெண்பா, ஆத்திசூடி, அரிச்சந்திர புராணம்—இவைகள் தான் திண்ணைப் பள்ளியில் படிக்கலாம். அதிலும் அரிச்சந்திர புராணத்தையும் குமரேச சதகத்தையும் படித்து விட்டால், அவனுக்கு ரொம்ப மதிப்பு.

அக்காலத்துத் தமிழ்ப் பையன்களுக்கு பூமி நூல் தெரியுமா? தெரியாது. சரித்திரம் படித்தார்களா? அதை ஏன் படிக்கவேண்டும்? படித்தால் அநாவசியமாக, சுயமரியாதை உணர்ச்சியும் தேச பக்தியும் வந்து விட்டால், அப்புறம் யார் கஷ்டப்படுகிறது?

குழிமாத்து, நெல் இலக்கத்துக்கு மேல், உயர் கணிதம் தெரியுமா? தெரிய வேண்டிய தேவையே இல்லையே! எப்பொழுது இங்கிலீஷ்காரர்கள் ஆளுவது என்று பிடிவாதம் கொண்டார்களோ, பின்னர் எதற்காக உயர் கணிதம் போன்றவைகளைப் பற்றி, தமிழர்கள் கவலைப் பட வேண்டும்? ஆளுகிறவனுக்குத் தெரியவேண்டிய சாஸ்திரப் பயிற்சிகள் அடிமைகளுக்கு எதற்காக என்று அக்காலத்துப் பெரியார்கள் முடிவுக்கு வந்திருக்க வேண்டும்.

'இளமையிற் கல்' என்று ஆத்திசூடி சொன்னதைப் படித்துக் கொண்டிருந்த பையனைக் கேட்டு விட்டு, அப்படியானால் 'முதுமையில் மண்' என்று பாரதியார் ஒரு சமயம் ஆத்திரத்தோடு கேலி செய்தார். இளமையில் கல்லாகச் செய்ய, திண்ணைப் பள்ளி, ஓர் இணையில்லாத ஸ்தாபனம் என்று சொல்லத் தேவையில்லை.

கல்லாய்ச் சமைந்து போன அகல்யைக்குக் கூட, ராமனுடைய பாதம் பட்டவுடனே, சாப விமோசனமாகி விட்டது. கௌதமனது சாபத்துக்கு விமோசனமிருந்தது. திண்ணை பள்ளி வாத்தியாரின் பாபத்துக்குப் பிராயச்சித்தமே கிடையாது. உத்தமதானபுரம், பாபநாசத்துக்குப் பக்கத்திலிருந்தாலும், எங்கள் வாத்தியாரின் பாபம் நாசம் அடைந்திருக்கவே முடியாது.

நாசமாயிற்று, இல்லையா என்பதைத் திட்டமாகத் தெரிந்து கொள்வதற்கு, எமதர்ம ராஜனுடைய கணக்கன் சித்திரபுத்

திரனைத்தான் கேட்கவேண்டும். அது சாத்தியப்படுவதற்கான வழியை யாரைக் கேட்டால் தெரிந்துகொள்ளலாம் என்று தெரியவில்லை. சர்ச்சிலைக் கேட்கலாமா? ஜின்னாவைக் கேட்கலாமா? அல்லது அம்பேத்காரைக் கேட்கலாமா?

ஏனென்றால் ஹிந்துக்களின் பாப விமோசன வழிகளையும் காலத்தையும் குறிப்பிட, இவர்கள்தானே நிபுணர்கள்? யாரை முதலில் கேட்கலாம்?

ஹிந்துக்களின் பரம்பரைப் பாபத்தின் காரணமாகத்தான், நாம் திண்ணைப்பள்ளியில் படிக்க நேர்ந்தது. இல்லாவிட்டால், பாரதியார் போன்ற மேதாவிகள், அடிமைகளாக இறந்து போயிருப்பார்களா? இந்த பாப விமோசனத்துக்கு சுயராஜ்யம்தான் வழியென்றார் லோகமான்யர். ஆனால் அக்காலத்துப் பெரியார்கள், காசி-ராமேசுர யாத்திரை என்றார்கள்.

நான் ராமேசுரத்துக்குப் போனேன். மதுரையிலிருந்து தனுஷ்கோடிக்கு அப்பொழுது ரயில் போடவில்லை. மதுரையிலிருந்து தனுஸ்கோடிக்குகட்டை வண்டியில் போகவேண்டும். பாதி ரயில் பிரயாணமும் பாதி கட்டை வண்டிப் பிரயாணமும் வேண்டாம் என்றுசொல்லி, பூராவுமே கட்டைவண்டிப் பிரயாணமாகச் செய்துவிட்டார் எங்கள் பாட்டனார்.

பகலில் சத்திரம் சாவடி, கண்ட இடங்களில் சமைத்துச் சாப்பிடுவது; இரவில் வண்டிப் பிரயாணம் செய்வது என்பது திட்டமாக்கப்பட்டது. தங்குமிடம் இல்லாமல் போனால், மரநிழலில் சமைப்பது.

ஒரு நாள் இம்மாதிரி சமைத்துக்கொண்டிருந்த பொழுது, மரத்திலிருந்து, கொம்பேறிமூக்கன் என்கிறார்கள் அல்லது பச்சைப்பாம்பு என்கிறார்கள், ஓலைப் பாம்பு என்றும் சொல்லுகிறார்களே, அது அரிசி கொதித்துக் கொண்டிருக்கிற பானையில் பொத்தென்று விழுந்தது.

அன்றைக்குச் சாதம் வேண்டாம் என்று தீர்மானித்து விட்டார்கள். இதுவும் ஒரு பிராயச்சித்தம்போலிருக்கிறது என்று நான் எண்ணினதுண்டு. ஆனால் பாட்டனாரைக் கேட்க, துணிச்சல் இல்லை.

உச்சுப்பிளி சத்திரத்தில் தங்கியிருந்தபொழுது என் இடையிலிருந்த தங்க அரைஞாணை, முடையாக இருந்த ஒருவன், அடித்துக்கொண்டு போய்விட்டான். பாட்டனார் வெளியே போயிருந்த சமயம், மற்றவர்கள் சமையலில் ஈடுபட்டிருக்கிற சந்தர்ப்பம், நான் ஜோராகத் தூங்கிக்கொண்டிருக்கிற நேரம் பார்த்து அவன் தட்டிக்கொண்டுபோய்விட்டான். இதுவும் ஒரு பிராயச்சித்தம்!

பாம்பனிலிருந்து ராமேசுரத் தீவுக்கு, சிறுபாய் விரித்த படகு. படகு ஓட்டிகளுக்குப் பக்கத்தில், குறுக்குவாட்டமாகச் சாய்த்து வைக்கப்பட்டிருந்த பலகையின் நுனியில், நான் உட்கார்ந்து

கொண்டு, கடலைப் பார்த்துக் கொண்டேயிருந்தேன். நான் விழுவேன் என்பாள் பாட்டி. அவன் விழமாட்டான் என்பார் பாட்டனார். படகுஓட்டிகள் இதைக் கேட்டுச் சிரிப்பார்கள். எனக்குப் பரமானந்தம்.

ராமேசுரம் கோயிலைப்பார்த்து ஸ்தம்பித்துப் போனேன். திண்ணைப்பள்ளி வாத்தியார் என்ற அசுரர், கொம்பேறிமூக்கன், என் அருமையான அரைஞாணை 'அபேஸ்' செய்த மடையன் இவர்கள் எல்லாரையும் இமைப் பொழுதில் மறந்தேன். இந்த அருமையான கோயிலுக்கு என்னைக் கொண்டுவந்துவிட்டபடகு ஓட்டிகளை வாழ்த்தினேன்.

எங்கள் ஊரிலே மாடு மேய்க்கும் பையன்கள், வெளியே படகு ஓட்டிகள் — இவர்களைத் தான் நான் என் தோழர்களாக மதித்தேன். நமது தமிழ்நாட்டிலே இவர்கள்தான் நான் அப்பொழுது கண்ட அற்புதங்கள். நான் கண்ட ஆபாசங்கள் (1) திண்ணைப்பள்ளி (2) கொம்பேறிமூக்கன் (3) முடிச்சுமாறி.

எனது தமிழ்நாட்டின் விஸ்தீரணம் விரிந்ததைப்பற்றி, நான் அப்பொழுது பெருமகிழ்ச்சி அடைந்தேன்.

●

டாக்டரும், நோயும்!

நோய் இருந்தால்தான் வைத்தியருக்கு வாழ்வு உண்டு என்னும் நிலை மாறவேண்டும். இது மக்களுடைய நல்வாழ்க்கைக்கு இடையூரான முறை. இதற்குப் பதில் ஒவ்வொரு வைத்தியரிடத்திலும் சில குடும்பங்களை பொறுப்பாக ஒப்படைக்கவேண்டும். அந்தக் குடும்பங்கள் நோயில்லாமல் வாழச் செய்வதற்கு தக்க அளவில் அவருக்கு வருவாய் உண்டு என்னும் நிலைமை ஏற்படவேண்டும்".

உழைப்பு!

" இன்பமாக இருக்கின்றோமா, இல்லையா என்று எண்ணிப்பார்க்க ஓய்வு கிடைப்பதுதான் துன்பம். அதற்கு மருந்து ஓய்வற்ற உழைப்புத்தான். ஆகவே உழைப்பால் களைப்படைபவர்களே இன்பம் அடைகின்றவர்கள்"

கலை!

"கலையின் பொருட்டாகவே கலை வேண்டும் என்று எண்ணியிருப்பேனேயானால், ஒரு சிறுவரிகூட எழுதும் தொல்லையை மேற்கொண்டிருக்கமாட்டேன்".

—பெர்னாட் ஷா

கவிபற்றி ஒரு கேள்வி

டி. கே. சி.

கவிதையை அனுபவிக்கிறது எப்படி?

நல்ல கேள்விதான்; அது இருக்கட்டும். குரோசி என்ற மேல்நாட்டு ஆசிரியர் ஒரு கேள்வி கேட்டார்:

கவி என்ற இன்பத்தை, எல்லோரும் அனுபவிக்க முடியுமா, அல்லது ஏதோ ஒருசிலர் தான் அனுபவிக்க முடியுமா? என்பது கேள்வி. அதற்கு அவரே பதில் சொல்லுகிறார்.

"கவியை ஒரு சாதனமாக வைத்து, சதா அதன் இன்பத்தில் திளைத்துக்கொண்டு இருப்பவர்கள் அபூர்வம்தான். ஆனாலும் சாமானிய மக்கள்—அதாவது இலக்கிய இலக்கணப் பயிற்சியினால் வறண்டுபோகாத சாமானிய மக்கள்—இயல்பாக ஈடுபட்டு அனுபவிக்கக்கூடிய விஷயந்தான் கவி" என்று ஆசிரியர் சொல்லுகிறார்.

கவி சம்பந்தமாகப் பேசுவதில் அவரை அதிகாரத்தோடு பேசக்கூடியவர் என்று மேல்நாட்டு மேதாவிகள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

* * *

ஆகவே இலக்கணங்களாகிய வெறும் அளவுகோல்களைக் கொண்டு அளக்க ஆரம்பித்தால் கவி நம்மைவிட்டு ஓடிப்போய் விடும், அளக்கும்போது அளவுகோலைப் பார்ப்போமே ஒழிய, அளக்கப்படும் கவி கண்ணுக்குப் புலனாகாமல் போய்விடும்.

* * *

ஆங்கில விமர்சனங்களோடு பழக்கம் வைத்துக்கொண்டதில் நம்மவருக்குக் கிடைத்தது என்னவென்றால், அளவுகோல்தான். அதுவும் ஒரு கத்தை கிடைத்திருக்கிறது.

அந்தக் கத்தை அளவுகோல்கள், தமிழ்க் கவியை அனுபவிக்க ஒட்டாமல் நன்றாய்ச் சேய்து விடும். தமிழ்க் கவியைப் பாடினால் "இதென்ன கவி! சங்கிதத்தோடு கலந்துவிட்டதே; சங்கீதத்தை விட்டு அப்பால் போகவில்லையே" என்று சொல்லி வருந்துவார்கள்.

எதுகை என்பது கடைசியில் அல்லவா இருக்கவேண்டும் என்று சொல்லுவார்கள். அடியின் முதலில் வந்தால் "அது என்ன சார்! இங்கிலீஷில் அப்படி இருக்கிறதா?" என்று முகத்தைச் சுழிப்பார்கள்.

ஆனால் அவர்கள் படித்த படிப்பில், ஷேக்ஸ்பியர், மில்டன் ஆகிய கவிஞர்கள் கடை

இந்தக் கட்டுரை, கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கத்தார் வெளியிட்ட பாரதி மலரிலிருந்து எடுக்கப்பட்டது.

எதுகையை வெறுத்தார்கள் என்பது வரவில்லை. உணர்ச்சி பாவத்தை கடை எதுகைகள் கெடுத்துவிடுகின்றன என்று அவைகளை ஒதுக்கவே செய்தார்கள்—அனுபவம்வந்து முதிர்ந்த காலத்தில்—அந்த ஷேக்ஸ்பியரும் மில்டனும்.

தமிழில் முன் எதுகை என்ன அற்புதங்களை எல்லாம் பாவ உலகில் சாதிக்கும் என்பதைக் கண்டறிந்தவர்கள் அல்ல அந்த ஷேக்ஸ்பியரும் மில்டனும்.

* * *

குற்றாலக் குறவஞ்சியில் இருந்து ஒரு பாட்டு, காதற் பாட்டு.

மலை, குற்றால நாதருடைய பொதிகை மலை. குற்றால நாதர் எப்பேர்ப்பட்டவர்? எங்கும் வியாபித்து நடனமாடுகிறவர். நடனத்துக்கு தாள வாத்தியங்கள் எவை? வானத்தின் இடி ஓசைகளும் சமுத்திரத்தின் அலை ஓசைகளுமே.

இந்தக் குற்றால நாதருடைய மலையில்தான் காதலியைக் (குறத்தியை) கண்டான் காதலன். அவளுடைய அழகையும் நடையையும் தமிழ்ப் பாஷை வர்ணிக்கிறது.

"கொட்டழகு கூத்துடையார்
குற்றால நாதர் வெற்பில்,
நெட்டழகு நேர் விழியும்,
நெற்றின் மேல்க் கஸ்தூரிப்
பொட்டழகும், காதிலசை
பொன் அழகுமாய் நடந்த
கட்டழகி தன் அழ(கு), என்
கண் அளவும் கொள்ளாதே"

இந்தச் செய்யுளை, நிறுத்த வேண்டிய இடங்களில் நிறுத்தி அவசரப்படாமல், நாலைந்து தடவை பாடவேண்டும்.

உண்மையில் தமிழ்ப் பாஷை பொல்லாத பாஷை என்றே படும்.

ஓசைகளும் தாளங்களும் நம்மை விட்டு அகலாது. குறத்தியினுடைய அழகு நம்முடனே யே கூட வரும். எங்கே போனாலும் வரும், அவளுடைய நடையும் கூட வரும். இத்தனையும் வருவதோடு கவியும் கூடவரும்.

ஆங்கில இலக்கணக் கோல் கொண்டு அளக்கக்கூடாது. அளந்து விட்டால், தமிழ் போய் விட்டது, குறத்தி போய்விட்டாள், அவளுடைய அழகுபோய் விட்டது, நடைபோய் விட்டது என்றுதான் சொல்லவேண்டும்.

இந்தக் கவியின் ரஸத்தை அனுபவிப்பதற்கு ஒன்றேஒன்று தான் வேண்டும்: இலக்கண இலக்கிய வறட்சியில், உள்ளம் கஷ்டப்படாமல் இருந்திருக்க வேண்டும். மற்றபடி தமிழ் நாட்டில் பிறந்த யாவரும் ஆசிரியர். குரோசி சொன்னபடி, கவி இன்பத்தை அனுபவித்து விடுவார்கள். அத்தகைய ஆடவர் பெண்டிருக்கு உரிய அரிய செல்வம் தமிழ்க் கவி.

●

சிறுகதை

தோட்டத்து மலர்கள்

பண்டரிநாதன்

"ராஜா......ராஜா......"

அண்ணியின் குரல் — நிராகரிக்க முடியாத அழைப்பு—என் காதில் தெளிவாக விழுந்தது. ஆனால், தூக்க மயக்கத்தின் இனிய சுவையை அனுபவித்துக் கொண்டிருக்கும் என்னால் கண்களைத் திறக்கமுடியவில்லை.

மறுபடியும், சிறிது அதிக சத்தத்துடன், அண்ணியின் பேச்சொலி செவிக்குள் பாய ஆரம்பித்தது. "என்ன ராஜா, இன்னமுமா தூங்குகிருய்?"

பாயில் புரண்டு கொடுத்தேன். கீழே சரிந்திருந்த தலையணையை உயர்த்தி, முகத்தைப் புதைக்கத்தான் முடிந்ததே தவிர, தூக்கத்தை கலைத்துவிட்டு எழுந்திருக்க மனம் வரவில்லை,

"ராஜா, மணி எட்டு!"

மணி எட்டானல்தான் என்ன, இல்லை பத்தானல்தான் என்ன? ஞாயிற்றுக்கிழமை. பறக்கப்பறக்க குளிப்பது, சாப்பிடுவது,, பஸ்ஸிற்காக ஓடுவது, காத்திருப்பது—இந்த தொல்லைகளும், வேலைச் சனியனும்தான் இன்று இல்லையே! இந்த நல்ல நாளில் கூடவா மணியும், கணக்கும், மற்ற தொல்லைகளும்?

யாரோ, அறையில் நுழைவதைத் தெரிவிக்கும் காலடியோசை கேட்டது. அந்த காலடியோசை அண்ணியுடையதல்ல; ஏனென்ருல், நடக்கும்போது பாதத்தை தரைமேல் அழுத்தி வைத்து, சற்றே தேய்த்துக் கொண்டு போவது அண்ணியின் பழக்கமாச்சே. அப்படியானல், வருவது யார்? கஷ்டப்பட்டு கண்களை இலேசாகத் திறந்தேன்.

என்முன், இதுவரையில், வீட்டில் சந்தித்திராத புதிய உருவம் நின்று கொண்டிருந்தது.

கண்களை அகல விரித்து கவனித்துப் பார்த்தேன். எட்டு அல்லது ஒன்பது வயதைத் தாண்டியிராத—ஆனல், வயதுக்குத் தக்க வளர்ச்சி பெருத—கருத்த மைச்சிமிழ் போன்ற இளஞ் சிறுமி ஒருத்தி மெதுவாக, பயம் கலந்த கீழ்க் குரலில் பேசினள். "அம்மா எழுப்பச் சொன்னங்க." சொல்லிவிட்டு அவள் நிற்கவில்லை, ஓடிவிட்டாள்.

எனக்கு சிரிப்பு வந்தது,

அந்த சிறுமியின் நடத்தையினுல். அவள் ஏன் அப்படி பேசினுள், எதற்காக, என்பதிலேயும் எதிர் பார்க்காது, மின்னலெனை ஓடி மறைந்தாள்? பயந்தா, நடுங்கியா! எதற்காக? குழந்தைகளே — வண்ண வாச நல் மலர்களே — அன்புடன் பார்த்து, இனிக்க இனிக்கப் பேசி, சிரித்துச் சிரித்து மகிழ்வது என் குணமாச்சே!

எழுந்து, முகத்தையும் கழுவிக் கொள்ளாது, நேராக சமையலறைக்குச் சென்றேன். என் தலையைக் கண்டதும் பானுவும், மோகனும் சாப்பிடுவதை நிறுத்திவிட்டு, "சோம்பேறி சித்தப்பா, சோம்பேறி சித்தப்பா......" என்று ராகமிழுக்க ஆரம்பித்தனர்." "ஆமாம், வாரத்தில் ஒரே ஒருநாள் தான் நான் சோம்பேறி, என் தேன் சிட்டுகளா" என்றேன் நான். குழந்தைகளிடம்— கவலை அறியாத அந்த இளம் ஜீவன்களிடம் — நான் எப்பொழுதும் அப்படித்தான் பேசுவது வழக்கம். "தேன் சிட்டே, சின்னக் குயிலே, பச்சைக் கிளியே, தோட்டத்து மலரே......" அண்ணியும் அண்ணுவும் கேலி செய்தும்கூட அப்படி அழைப்பதை நான் நிறுத்தவில்லை. பின் என்ன, உலைக்களச் செந் நெருப்பே, இரும்பாணியே, கூர்முனைச் சிறு முள்ளே—இப்படியா கூப்பிடுவது?

டம்ளர் நிறைய காபி ஊற்றி, என்னிடம் நீட்டினுள் அண்ணி. உடனே, சோம்பேறி சிற்றப்பாவைப் பற்றி ராகம் போட்டுப் பாடி கும்மாளமடித்துக் கொண்டிருந்த குழந்தைகளின் பக்கம் சிறு கோபத்தால் அகன்ற பெரு விழிகளைக் காட்டினுள். இரண்டும்—என் வெண் புருக்கள்— 'கப் சிப்' பென்று அடங்கிவிட்டன.

காபியைக் குடித்துக்கொண்டே கேட்டேன். "அண்ணி, யார் அந்த பெண்?"

"அவளா......" அண்ணியின் பெருமூச்சு, அவளது பேச்சிற்கு முடிவாய் நின்றது. பிறகு, மலர்ச்சியற்ற சிரிப்பின் நடுவே," அவளும் ஒரு தோட்டத்து மலர் தான்" என்ருள்.

"கேலி இருக்கட்டும் அண்ணி, அவள் யார்?" "பாவம்." மறுபடியும் ஓர் நீண்ட, ஓசையுள்ள, பெருமூச்சு. "இந்த சின்ன வயதிலேயே, வேலை செய்து, வயிற்றை நிரப்பவேண்டுமென்று அவள் தலையெழுத்து."

"வேலைக்காரியா?"

அண்ணி தலையாட்டினுள்.

அந்த நேரத்தில், வெளியில், தண்ணீர் வழிந்து கொண்டிருக்கும் பெருங் குடமொன்றை— அவளால் அந்த பாரத்தை எளிதில் தாங்க முடியாது—சிரமத்துடன் சுமந்துகொண்டு அந்த பெண் வந்து நின்ருள்.

"இங்கே வைத்துவிட்டுப் போ தங்கம். கீழே, குழாயடியிலிருக்கிற பாத்திரங்களையெல்லாம் சுத்தமாகத் தேய்த்து கழுவிக் கொண்டு வா." அண்ணியின் பேச்சு முடிந்தவுடன், குடத்தை கீழே இறக்கி வைத்து

விட்டு, அந்த பெண்—மெருகிழந்த, ஒளியற்ற தங்கம்—ஓடத் தொடங்கினாள்.

"தங்கம்." அண்ணியின் சூடான கோபக் குரல் அவளை அசையாச் சிலையாக நிறுத்தியது. "இதென்னடி இந்த ஓட்டமும் பாய்ச்சலும்? சொல்வதை சரியாகக் கேட்டுவிட்டுப் போ. முதலில், 'பாத்ரூம்' காலியாக இருந்தால், ராஜா குளிப்பதற்கு, தொட்டியில் தண்ணீர் நிரப்பி வை."—அண்ணியின் பேச்சு முடிந்தவுடன், கற்சிலையாக வாசலில் நின்றுகொண்டிருந்தவள், பயம் கலந்த பார்வையை எங்களிடம் வீசிவிட்டு, மறுபடியும் காற்றென விரைந்து சென்றாள்.

"அண்ணி, இவள் எதற்காக இப்படி ஓடுகிறாள்? என்னை எழுப்பிவிட்டு இதுமாதிரிதான் ஓடி மறைந்தாள். பயமா?"

"பயந்தான். இதற்குமுன் வேலைசெய்து கொண்டிருந்த வீட்டில் கிடைத்த அனுபவம்தான் இப்படி ஓடவோட விரட்டுகிறது. இங்கேயும், எங்கே அடி விழுந்துவிடுமோ என்ற பயம்தான் அவளை இப்படி நடத்துகிறது. சரி ராஜா, நீ போய் குளித்துவிட்டு வா. தோசை ஆறிவிடப் போகிறது."

"சரி அண்ணி. ஒரே நிமிஷத்தில் ஓடிவந்து விடுகிறேன்."

கீழே சென்றேன். என்னைக் கண்டதும், பாத்திரங்களை சுத்தம் செய்துகொண்டிருந்த அந்த சிறிய வேலைக்காரி, அடக்கத்துடன் எழுந்து நின்று, குனிந்த தலை நிமிராமல், "தண்ணி நிரப்பி வச்சிருக்கேன்" என்றாள்.

உள்ளே சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டேன். தொட்டி நிறையத் தண்ணீர். ஆம், தொட்டியின்மேல் விளிம்புவரை தண்ணீர் தேங்கி யிருந்தது. இவ்வளவு தண்ணீரும் எனக்குத் தானா? மகிழ்ச்சி என் மனத்தில் கூத்தாடியது. ஆனால், அதே சமயத்தில் நெஞ்சின் ஒரு மூலையில் கரிய துயர இருள் மெல்லப் படிந்தது. தொட்டியை நிரப்ப, அந்த சின்னஞ் சிறு கைகள்—மெலிந்த, சதை பற்றற்ற, எலும்பு தெரியும் அந்த கைகள்—குழாயுடன் எவ்வளவு கஷ்டத்துடன் போராடி யிருக்கும்? மேட்டுப் பிரதேசத்தில் இருப்பதால், குழாயிலிருந்து தண்ணீர் வரவழைக்க, முதலில் ரத்தத்தை வியர்வைத் துளிகளாக மாற்றவேண்டும். அந்த கஷ்டத்தை எண்ணி, கால்தொட்டியை நிரப்பி, குளிப்பதாக நம்பி, பல நாட்களுக்கு உடலை நனைத்துக் கொள்வதோடு நின்றுவிடுவேன். ஆனால், இப்பொழுது? உடலுழைப்பு இல்லாமல், வேண்டிய தண்ணீர். வாலிபனை நான் செய்யாததை—வலிவுள்ள என் கைகளால் செய்ய முடியாததை—சக்தியற்ற அந்த இளம் பிஞ்சுக் கரங்கள் செய்து முடித்திருக்கின்றன.

குளித்துக் கொண்டிருக்கும் போது வெளியே பேச்சுக்குரல் கேட்டது. காதுகளை கூர்மையாக்கிக்கொண்டு கவனித்துக் கேட்டேன்.

"உம்......தங்கமா உன் பெயர்?" — கரகரப்பான, சொறித் தவளையின் ஒலியொத்த அந்த குரல்—பெண்மையின் மென்மைத் தன்மை யிழந்த அந்த குரல்—வீட்டுச் சொந்தக் காரியினுடையது. உடனே, கட கடவென்று, அடுக்குப் பானை களை உருட்டி விட்டதுபோல் அந்த கிழவி சிரிக்கும் சத்தம் கேட்டது. "தங்கமா, உன் பெயர்? ஏண்டி, தங்கமாடி நீ?" அடுப்புக் கரி மாதிரி இருக்கிருய், எப்போடி தங்கம்மாதிரி ஜொலிக் கப்போறே?"—மீண்டும் அதே நீண்ட, வெடித்துவரும் கேலிச் சிரிப்பொலி. கிழவியின் பேச் சுக் குரல் மறுபடியும் கேட்டது. "என்னடி கிளம்பிவிட்டாய் அதற்குள்? இதோ பார், நீ கமலாவுக்கு மாத்திரம் வேலைக் காரியில்லே. இது என் வீடு நான் சொல்ற வேலையையும் செய்தாகணும், தெரிஞ்சதா?"— எவ்வளவு பேராசை, கூலியின்றி வேலை வாங்க? இருக்காதா அவளுக்கு? இல்லையென்ருல், நான்கு சின்ன அறைகளுக்கு, பட்டப் பகலிலும் விளக்கு போட்டு சமையல் செய்யவேண் டிய நிலையுள்ள இடத்திற்கு— நாற்பது ரூபாய் வாடகை வாங்கு வாளா?

மாடிப்படியில் ஏறிக்கொண் டிருக்கும்போது, பின்புற மிருந்து, "ராஜா" என்ற குரல் பறந்து வந்தது. திருப்பிப் பார்த் தேன். ராமு நின்றுகொண்டி ருந்தான். நான் பேசுவதற்கு முன், அவன் ஆரம்பித்துவிட் டான். "டேய் சோம்பேறி, இப்பதான் குளிச்சியா?"

அவனுக்குப் பதில் கொடுக்க வாய் திறந்தேன். அதற்குள், மேலேயிருந்து அண்ணியின் அழைப்பு—அதில்தான் எவ்வ ளவு அவசரம் வந்தது.

ராமுவும் நானும் மேலே சென் ருேம். வருந்தி வருந்தியழைத் தும் அவன் சாப்பிட வர வில்லை. காபிபானையான அவன் டம்ளரை கையில் திணித்தும் கூட தொட மறுத்துவிட்டான்.

"என்ன ராமு? என்ன விசே ஷம்?" என்று கேட்டேன் சாப் பிட்டுக் கொண்டே.

"விசேஷந்தான். வீட்டிலே கொண்டாட்டம். என் தங்கை சீதாவின் பிறந்தநாள். உன்னை கூட்டிக்கொண்டு போகத்தான் வந்தேன்." என்ருன் அவன். சொல்லிமுடித்துவிட்டு, அனு மதிக்காக, அண்ணியைப் பார்த் தான்.

"சரி ராமு, கூட்டிக்கொண்டு போ. எனக்குக்கூட இன்று என்ன செய்வதென்று ஒரே யோசனை. தேதி இருபதாகிறது. மார்க்கட்டிலேகூட, கடனுக்கு, நல்ல காய்கறி கிடைக்காது. ராஜாவுக்கும், அவன் முயல் குட்டிகளுக்கும் ஞாயிற்றுக்கிழ மை 'ஸ்பெஷல்' வேணுமே, அதற்கு வழியில்லாமல் தவித் துப் போனேன். நல்லவேளை, நீ வந்தாய்." என்று சொல்லி முடித்துவிட்டு, வாசல் அருகில் நின்றுகொண்டிருந்த தங்கத் தின் பக்கம் திரும்பினுள்,

"இந்தாடி தங்கம். நான்

சொன்னதை மறந்துவிடாதே. அந்த பாத்திரங்களை நன்ருக தண்ணீர் ஊற்றி அலம்பு. பிறகு நான் குளிக்க கொஞ்சம் தண்ணீர் பிடித்து வை. முடிந்தபிறகு ரூமை பெருக்கி விடு. தெரிந்ததா ?"

மீண்டும் வேலை, ஓயாத உழைப்பு. அறுபட்டு வாடித் தொங்கும் இளங்கொடிபோன்ற சின்னஞ்சிறிய, வலிவற்ற அந்த கரங்களை கவனித்தேன்.

அண்ணி என்னைப் பார்த்து பேசத் தொடங்குகிருள். "ராஜா போகும்போது உன் பேசும் சித்திரங்களின் கண்களில் பட்டு விடாதே. பிறகு, என்னுல் பதில் சொல்லி சமாளிக்க முடியாது."

ராமுவும் நானும் புறப்பட்டோம். வழியெல்லாம், நான் தங்கத்தைப்பற்றி பேசிக் கொண்டே போனேன். அழகிய மென்மையான, நிறம் மிளிரும் இதழ்பல விரித்து நல் மணம் பரப்பவேண்டிய புதுமலர் ஒன்று வேலைக் கொடுமையென்னும் வெப்பத்திணுல்-நெருப்புச் சூட்டிணுல்-எரிந்து கரிந்து பயனற்றுப் போகிறதே என்று கவலைப் பட்டேன். விளையாட்டிலும், படிப்பிலும் ஈடுபட்டு வேடிக்கையுடன் சிரிப்பு பொங்க வளரவேண்டிய வேளையில், வீட்டு வேலைகளுக்காக ரத்தத்தை உருக்கவேண்டியிருக்கிறதே என்று எண்ணி வருத்தப்பட்டேன்.

கீதாவின் பிறந்தநாள் விசேஷத்தைப் பார்க்கப் பார்க்க என் மனம் தீவிரமாக, வேறு எதுவும் நினைக்காது தங்கத்தை எண்ணியெண்ணி தணல்பட்ட மெழுகென உருகியது. அந்த கருநிறத் தங்கம், இந்த பொன்னிற மேனி கொண்ட கீதாவாகயிருந்தால்-இப்படியா இருப்பாள் ? அவளும் கண்கவர்உடைதரித்து ஒளிவீசும் நகைகளைப் பூட்டிக் கொண்டு பூந்தோட்டமாக மாறி, அழகுச் சிலையாக, அலங்காரப் பொம்மையாக உல்லாசமாக ஆடிப்பாடி ஓடித்திரிவாளே. ஆம் நிச்சயமாக.

வீட்டிற்கு திரும்பும்போதே மனதில் ஒரே எண்ணக்குவியல்கள். எல்லாம் தங்கத்தைப்பற்றித்தான். சரி, பெரியவர்கள் தான் அவளுக்கு வாழ்வளிக்க மாட்டார்கள். கவலையை ஓரளவு மறக்க வேலைச்சுமையின் கனத்தை கவனிக்காமலிருக்க, அவளுக்கு வேறு வழிகளில் சந்தர்ப்பம் செய்து கொடுக்கவேண்டும். குழந்தைகளுடன் குழந்தையாக, சிரிக்கும் மலர்களுடன் சேர்ந்து நகைக்கும் பூவாக அவளை ஆக்க வேண்டும். ஆம், ஆக்கிவிட வேண்டும். வீட்டுக் குழந்தைகளுடன் தங்கமும் கைகோர்த்துக் கொண்டு விளையாடவேண்டும்.

வீட்டின் முன் குழந்தைகள் - அழகுப் பூக்கள் - விளையாடிக் கொண்டிருந்தன. பாலு, மோகன், சுசீலா, சந்திரா, மனோகரன்......சிரிப்பு, கூச்சல், மகிழ்ச்சி. அது கண்ணுக்கும், நெஞ்சுக்கும் இனிய காட்சி. என் கண்கள் தங்கத்தைத் தேடின. அவளையும் அந்த குதூகலக் கூட்டத்தில் ஒருத்தியாக

ஆக்கவேண்டுமென்று என்மனம் துடித்தது. நல்லவேளை! வாசற் கதவின் பக்கத்தில் அவள் நின்றுகொண்டிருந்தாள். பார்த்தேன். கண்களிலே மிதக்கும் ஏக்கம். முகத்திலே நிறைந்திருக்கும் சோகம்.

என்னால் மனத்தை அடக்க முடியவில்லை. ஓடிக்கொண்டிருக்கும் அந்த ரயிலின் முன் போய் நின்றேன். "மோகன், அதோ அங்கே நம்ம தங்கம் நிற்கிறாள். அவளையும் சேர்த்துக்கொண்டு விளையாடு." என்று கெஞ்சிக் கேட்டேன்.

எனக்கு எதிராகப் பறந்து வந்த பதில்! "போங்க சித்தப்பா, அவ வேலைக்காரியாச்சே. அவளை எப்படி எங்களோடு சேர்த்துகுவோம்?" என்றான் மோகன், "மாமா, தங்கத்தை எங்களோட சேர்த்துக்கக் கூடாதென்னு பாட்டி சொல்லியிருக்கா. அவ வேலைதான் செய்யணும். விளையாடக்கூடாதாம்." என்றான் மனோகரன்.

நான் தங்கத்தைப் பார்த்தேன். கண்ணீர் வழியும் கண்களுடன் அவள் என்னைப் பார்த்தாள்.

" தங்கம், நீவா " என்று அழைத்தேன்.

அவள் தயங்கி நின்றாள். தடுமாறினாள். கடைசியில் 'உஹும்' என்று சொல்லி, தலையாட்டிவிட்டாள்.

"பயப்படாதே தங்கம், வா, வந்து விளையாடு."

அவள் அடியெடுத்து வைத்தாள்.

அதற்குள் மாடியிலிருந்து அண்ணியின் குரல் ஓடிவந்து. 'தங்கம், அடி தங்கம்......

அது காதில் விழுந்ததும், தங்கம் விழுந்தோடிச் சென்றாள். நின்றுகொண்டிருந்த ரயில் ஊதிவிட்டு, 'குப்குப்' பென்று வாயினால் புகை கக்கிக்கொண்டு புறப்பட்டது. ●

வாழ்க்கை !

"வாழ்க்கை ஒரு ரஸ கதம்பம். பல சரக்குகள் குழைத்த ஒரு கலவை. வாஸ்தவமும், கற்பனையும், இல்லாததும், பொல்லாததும் சேர்ந்ததோர் விசித்திரக் கூட்டு"

—கவி தாகூர்

செம்படவனின் பிரார்த்தனை

மூலம்:
பி. கோஸ்வாமி

தமிழாக்கம்:
என். பாஸ்கரன்

ஏ கடவுளே! என்னை உனக்குத் தெரியுமா? தெரியுமென்றுதான் நினைக்கிறேன்! 'அய்க்கிச்சி குபோயாமா' என்பதுதான் எனது பெயர். நான் ஒரு சாதாரண மீன்பிடிப்போன், ஆம். ஜப்பானியச் செம்படவன்! மிக நீண்ட நாட்களுக்கு முன்பு-நான் ஒரு சிறு குழந்தையாயிருந்தபொழுது. ஆம், எனக்கு ஞாபகமிருக்கிறது ஒரு கிழவி - அது என் பாட்டி என்று பிறகு யாரோ சொல்லக் கேள்விப்பட்டிருக்கின்றேன் - என்னைப் படைத்தது நீதான் என்று அவள் சொன்னது இன்னும் நினைவிலிருக்கிறது. என்னை மட்டுமல்ல. எல்லா ஆண் பெண்களையுமே, அவர்கள் நல்லவர்களோ கெட்டவர்களோ, அத்தனை பேரையும், எல்லா மீன்களையும், மிருகங்களையும், எல்லா உணவுப் பண்டங்களையும், நீ தான் உண்டாக்கினாய் என்று அவள் சொன்னாள். ஓ! கடவுளே! நான் அவள் சொன்னதை நம்பினேன் - அது உனக்குத் தெரியாதா என்ன? ஆனால், இந்த ஏழை மீன் பிடிப்போனின் வார்த்தைகளை - யாருக்கும் தெரியாத, கேவலமான வாழ்க்கை நடத்தும், இல்லை, மரணப்படுக்கையிலே கிடந்து பயங்கரமான, மோசமான, புரியாத சாவை எதிர் நோக்கியிருக்கும், இந்த ஏழையின் வார்த்தைகளைக் கேட்பாயோ என்னவோ?

சென்ற ஆண்டில் ஜப்பானியக் கடற்கரையில் உள்ள பிகினி என்ற தீவில் அமெரிக்கர்கள் ஜலவாயு குண்டு பரிசோதனை செய்தார்கள். அதன் விளைவுகள் மிக மிகப் பயங்கரம். கடலில் மீன் பிடிக்கச் சென்ற ஜப்பானிய செம்படவர்கள் பலர் பலியாயினர். இந்த சம்பவத்தை உருக்கமாக விவரிக்கிறது. இந்த எழுத்தோவியம். 'பீஸ் ரெவியூ' சஞ்சிகையிலிருந்து எடுக்கப்பட்டது.

ஆ! நான் செத்துக்கொண்டிருக்கின்றேன். உன்னால் என்னைக் காப்பாற்ற முடியாது! ஏ, கடவுளே! இன்னும் என்னை நீ ஞாபகத்தில் வைத்திருக்கிறாயா, இன்னும் என்னை நேசிக்கிறாயா என்பது எனக்குத் தெரியாது! நான் ஒரு சாதாரண ஜந்து - நிர்மலமான நீல நிற ஆகாயத்திலிருந்து - விழுந்த அதிர்ச்சி தரும் இடியினால் பாதிக்கப்பட்ட சாதாரண ஜந்து!

ஏ கடவுளே! நான் சொல்வதைக் கொஞ்சம் காது கொடுத்துக் கேள்! அந்த ரத்த

வெறி பிடித்த பூதத்தின்குறுக்கே நான் எப்படிப்போனேன் என்ற சோகக் கதையைக் கேள். பிரும் மாண்டமான சுவை மிகுந்த இந்த அன்னை பூமியை அழிக்கப் பார்க்கும், அந்தக் கொடிய பூதத் திடம் நான் பட்ட பாட்டைக் கேள்! ஏதும் குற்றமறியாத எங்களில் இரண்டு 'டஜன்' பேர் கடலில் இரண்டுமாதப் பிரயா ணத்திற்காகப் போனும் (ஆம், அது நீ எங்களுக்களித்த மகத் தான பரிசுதானே! பெரியவர் களோ சிறியவர்களோ அதிலே எல்லோரும் சமமாகத்தானே சொந்தம் கொண்டாடுகிறோம்) மீன் பிடித்துக்கொண்டு, பாடிக் கொண்டு, எங்கள் வீடு வாசல் களைப்பற்றி, மனைவிமார்களைப் பற்றி, அருமைக் குழந்தைகளைப் பற்றிப் பேசிக்கொண்டு நாங்கள் படகில் சென்றுகொண்டிருந் தோம்! நாங்கள் சந்தோஷமா கத்தான் இருந்தோம்! ஏழை களாகிய நாங்கள், ஒன்றும் தெரி யாதவர்கள் என்று எல்லோரா லும் சொல்லப்படுபவர்களாகிய நாங்கள், இருக்கிறதை வைத் துக்கொண்டு திருப்திப்படுகிற நாங்கள், மற்றவர்களை நாகரிகப் படுத்துகிறோம் என்ற பெயரால் இதரர்களைக் கொள்ளையடித்து மேலும் மேலும் சொத்து சேர்க்க வேண்டும் என்று கனவிலும் கருதாத நாங்கள், சந்தோஷமா கத்தான் இருந்தோம்! அன்று 1954-ம் ஆண்டு மார்ச்சு மாதம் முதல் தேதி என்று நினைக்கி றேன். வழக்கம்போல் சந்தோ ஷமாக - 100 டன் மீன் பிடிக்கும் பெரிய கப்பலான 'பக்கூர்யு மாரு 5-ல்' மீன் பிடித்துக்கொண் டிருந்தோம்! ஏ, கடவுளே, என் மரணப்படுக்கையிலே கிடக்கும் இந்த முட்டாள் மனிதன் என்ன பயித்தியக்காரச் செய்தியைச் சொல்லப்போகிருன் என்று ஆச் சரியப்படுகிருயா? ஏனெனில், இந்த உலகத்தில் நீ கேட்பதற்கு எவ்வளவோ முக்கியமான விஷ யங்கள் இருக்கின்றன – பணம் படைத்த, சக்திமிக்க, திறமை சாலிகளான நல்ல மனிதர் களின் உயர்ந்த வேண்டுதல் களையெல்லாம் நீ கேட்கவேண் டியிருக்கும். இந்த ஏழையின் செய்தியையும் கொஞ்சம் கேள்! ஆனுல், எனக்கும்கூட உன்னி டம் சொல்ல உரிமை இருக்கி றது. ஆம். எத்தனையோ ஆண் டுகளுக்கு முன்னுல் அந்தக் கிழவி கூறியிருக்கிருள், நீதான் என்னைப் படைத்தாய் என்று- அதனுல் நான் சொல்வதையும், கேட்பதற்குச் சிரமமிருந்தாலும் கூட - நீ கேட்டுத்தான் ஆக வேண்டும். எங்களைப்போன்ற ஏழை மனிதர்கள் எப்போதுமே மற்றவர்கள் சொல்வதைக் கண் மூடித்தனமாக உடனே நம்பி விடுவோம்! இது உனக்குத் தெரியாதா! எனவேதான், என் னைப் படைத்தவனே உன்னைத் 'தொந்தரவு' படுத்தத் துணிந் துவிட்டேன்! எனது கடைசி மூச்சு அடங்குவதற்கு முன்னுல் என்னை எப்படி அந்தச் சண்டா ளர்கள் கொன்ருர்கள் என்பதை எப்படி என்னை என் வீட்டிலி ருந்து, என் காதலியிடமிருந்து

என் இளமையிலிருந்து, எனது வாழ்க்கையிலிருந்து துண்டித்துவிட்டார்கள் என்ற துக்கச்செய்தியை நான் சொல்லிவிடுகிறேன். கடவுளே! உன்னைத் தொந்தரவு கொடுப்பதற்காக என்னை மன்னித்துவிடு! நீ படைத்துவிட்ட இந்தப் பயனற்ற ஏழையின் கதியைப்பார்! ஆம். ஆஸ்பத்திரியில் கிடக்கிறேன் - பெரிய பெரிய டாக்டர்கள் என்னைச் சுற்றியிருக்கிருர்கள். இருந்தாலும், என்னை யாராலும் காப்பாற்ற முடியாது!

அப்பொழுது அதிக வெளிச்சமில்லை. நாங்கள் மீன் பிடித்துக்கொண்டிருந்தோம்-அதுதானே எங்களது வாழ்க்கை, உனக்குத் தெரியாதா என்ன? நாங்கள் சந்தோஷமாகத்தான் இருந்தோம். நான் கவிஞனல்ல! பெரிய பண்டிதனல்ல. நீதான் என்னை ஒரு சாதாரண ஏழையாக, ஒன்றும் தெரியாத மீன் பிடிப்போனைப் படைத்திருக்கின்ருயே! ஆம். அதற்காக நான் உனக்கு நன்றி செலுத்துகிறேன். மீன் பிடிப்பது ஒரு பெரிய கலை! அதை நான் அதிகமாக நேசிக்கிறேன்! ஆனல் திடீரென்று ஏதோ ஒரு முணுமுணுப்புச் சப்தம்! ஒரு பெரிய கிண்ணம் தலைகீழாக கடலைநோக்கி கவிழ்ந்ததைப் போல் ஒரு தோற்றம்! தண்ணீர்! அந்த சமுத்திரத்தின் இனம்தெரியாத சங்கீதத்தின் ஓசை. பொழுது விடிவதற்கு முன்னல் அந்தக் கடலில் உண்டாகும் விளங்காத எத்தனையோ பாறைகள் எவ்வளவு இனிமையாக இருக்கும் கேட்பதற்கு! நட்சத்திரங்களெல்லாம் அந்த மேகத் திரையினூடே ஓடுவதைப் போன்று ஒரு பிரமை! எல்லாம் சேர்ந்து 'கோரஸ்' பாடுகின்றனவா? நான்கூட அதோ, வெகுதூரத்திலிருக்கும் எனது இனிய வீட்டை நினைத்துக்கொண்டு ஏதோ ஒரு பாட்டை முணுமுணுக்க ஆரம்பித்தேன். வீடு! எவ்வளவு இனிமையான சிறிய கூடு! ஆம், அதுதான் எங்களுக்கு இதந்தரும் இனிய இடம்! கடவுளே! எங்களது இனிய வீடுகளுக்காக—அதிலுள்ள இன்பம், துன்பம், இணைப்பு பிணைப்பு இவைகள் கொண்ட—அந்த வீடுகளுக்காக — நாங்கள் உனக்கு நன்றி செலுத்துகிறோம். புகை பரவிய நீலநிறக் கண்ணுடியைப்போல அப்பொழுதும் இருட்டாகத்தான் இருந்தது—நாங்கள் வேலைசெய்துகொண்டு, பாடிக்கொண்டு, பேசிக்கொண்டிருக்கும்பொழுது ஐயோ கடவுளே, நான் என்னத்தைச் சொல்ல. அது பயங்கரமாக, கொடூரமாக, சகிக்கமுடியாததாக இருந்தது. அடிவானத்திலிருந்து ஒளிமிகுந்த வெளிச்சத்தின் சிகப்புரேகை யொன்று ஆகாயத்தையும் சமுத்திரத்தையும் பற்றியது. ஒரே நெருப்புமயம்! சுருங்கச் சொன்னல் எங்கள் கண்கள் குருடாயின. அப்புறம்—சே, இது என்ன முட்டாள்தனம். அது என்ன என்றே எனக்குத்தெரியவில்லை.

என் இதயம் அடிப்பது நின்று விட்டதுபோல் தோன்றிற்று! என் தலைமயிரெல்லாம் குத்திட்டு நின்றன—அது விவரிக்க முடியாத அளவுக்கு பயங்கரமாக இருந்தது, அது உனக்குத் தெரியாதா? அந்த பயங்கரமான நிறம் பின்னர் மஞ்சளாக மாறுவதைப்போல் இருந்தது, ஆனால் மறுபடியும் அந்த நிறம் அச்சுறுத்தும் அசுர நெருப்பாக மாறியது. அங்கே ஒன்றுமே இல்லை! நானும் மற்றவர்களைப்போல் மந்தமாக நின்றுகொண்டிருந்தேன். அதிர்ச்சியடைந்த பார்வையால் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டோம். உணர்விருக்கிறதா அல்லது சொப்பனமா என்பதைத் தெரிந்துகொள்ள ஒருவரையொருவர் கிள்ளிப் பார்த்துக்கொண்டோம். இன்னும் கொஞ்சநேரத்தில் சாகப்போகிற நான் உன்னிடம் எதற்காக மறைக்கப்போகிறேன், என் நரம்புகளெல்லாம் தளர்ந்து விட்டன! நான் அதிர்ச்சியடைந்திருந்தேன். வீட்டுக் கவலை என் நெஞ்சத்தை அழுத்தியது. எனது வீடு, எனது உற்ருர் உறவினர், ஐயோ என் ஏழை இயமே! சற்றுநேரத்தில் ஒரு பயங்கர சப்தம் கேட்டது. இந்த பூமியே பூகம்பம் போல் வெடிக்கப்போகிறது என்று நினைத்தோம். அதனால் தான் அந்த அடிவானத்திலிருந்துவந்த அந்த நரகஒளி ரேகையும், இடியைப்போன்ற அந்தப் பயங்கர ஓசையும் எங்கள் கண்களையும், காதுகளையும் குருடாகவும் செவிடாகவும் ஆக்கி விட்டது. மறைந்துகொள்ள இடமில்லாத சமுத்திரத்திலே அனாதைகளாக, உனது இனிமையான ஆகாயத்தின்கீழே—உனது அன்பான கண்களுக்கு நேரே தத்தளித்துக்கொண்டிருந்தோம்.

அதன்பிறகு வழக்கம்போல் பொழுதுபுலர்ந்தது. நம்பிக்கையையும் சந்தோஷத்தையும் தரும் பொழுது விடிந்தது. பாம்புகளுக்கும், புலிகளுக்கும் கொலைக்காரர்களுக்கும் கொள்ளைக்காரர்களுக்கும் தவிர மற்ற எல்லோரும் எங்ஙனம் விடிவைப் பார்த்து மகிழ்வு கொள்வார்களோ அங்ஙனமே நாங்களும் மகிழ்வு கொண்டோம். இருப்பினும்கூட சிறிது நேரத்திற்கு முன்னர் நாங்கள் அனுபவித்த அந்த பயங்கரம் ஒருவேளை 'நாகசாகி' யைப்போல் எங்கள் நகரங்கள் சிலவற்றை ஆக்கியிருக்குமோ என்ற எண்ணமும் ஏற்பட்டது. எங்கள் வீடுகளின் ஞாபகம் அடிக்கடி ஏற்பட்டது. மனைவி மக்களின் எண்ணம் எங்கள் சிந்தனையிலே தொத்திக்கொண்டது. அதற்குப் பிறகு ஐயோ கடவுளே, அதற்குப் பின் நடந்ததுதான் என்னை இந்த மரணப் படுக்கையிலே கிடத்திவிட்டது என்று டாக்டர்கள் சொல்கின்றனர். நடந்துபோன அதிசய சம்பவத்தைப்பற்றி நாங்கள் பேசிக்கொண்டிருந்த சந்தர்ப்பத்திலே வானத்திலிருந்து

ஏதோ ஒருவித சாம்பல் எங்கள் மீன்பிடிக்கும் பாத்திரத்தின் மீதும் எங்கள் தலைமீதும் விழுந்தது. அது என்னவாக இருக்க முடியும்? இந்த பூமியையே அழிக்கப்போகிற எரிமலையின் சாம்பல்தானு அது? எங்கள் உடம்பெல்லாம் ஒரு பயங்கரமான நடுக்கம் உண்டானது. ஒருவித கொடுமையான நோய் எங்களைப் பற்றியதைப் போன்று உணர்ந்தோம்.

ஆமாம்! இப்பொழுது நான் செத்துக்கொண்டிருக்கிறேன். நான் சொல்வதைக் கொஞ்சம் கேள்! எல்லாம் வல்ல இறைவனே! நான் சாவதற்குள் நான் அனுபவித்த அவஸ்தைகளின் அத்தியாயங்கள் அத்தனையையும் தயைசெய்து கேட்டுவிடு. என் வேதனையின் விபரம் பூராவையும் கேட்டுவிடு. அந்த அதிசயமான சம்பவத்திற்கு பின்னுல் எங்களை நோய் பற்றிக்கொண்டது. தலையெல்லாம் ஒரே வலி! காரணமின்றி அடிக்கடி ஏனே வாந்தியெடுத்துக் கொண்டே இருந்தோம். பின்னர் கை, கால், கழுத்து, மண்டை, உடம்பின் சகல பாகங்களிலும் குடைச்சல், சொல்ல முடியாத குடைச்சல் ஒரே பலஹீனம்! அப்புறம்தான் உனக்குத் தெரியுமே. எங்களுக்கு வீட்டு நினைப்பு! ஆமாம் இந்த நிலையில் எப்படி எங்களால் தனித்து கடலில் இருக்கமுடியும் பின்னர் நாங்கள் வீடு திரும்பினேம். அந்த மாதத்தின் 14-ம் தேதி 'மியூறி' மலையின் அடிவாரத்திலுள்ள 'யாய்சு' துறைமுகத்தை வந்தடைந்தோம். அதற்குள் எங்கள் அழகான தலைமயிரெல்லாம் அனேகமாக கொட்டிவிட்டது. எங்கே பார்த்தாலும் சொல்லமுடியாத அளவுக்கு வேதனை. பின்னர் டாக்டர்களின் உதவியை நாடினேம். அவர்களெல்லாம் உள்ளபடியே மிகவும் கெட்டிக்காரர்கள். ஆமாம்! எங்களைப்போல் விஷயம் தெரியாதவர்களா? அவர்கள் எல்லாவற்றையும் உடனே புரிந்து கொண்டார்கள். எங்களைப் பரிசோதனை செய்துவிட்டு, இந்த நிலைக்குக் காரணம் எச். பாம்' மின் சாம்பல்தான் எனக் கூறினர். என்ன அர்த்தத்தில் அப்படிச் சொன்னுர்கள் என்பது எனக்குப் புரியவில்லை. 'எச். பாம்,' கொஞ்சம் யோசித்துப் பார்! இந்த சிறிய ஆனுல் கொடுமையான வார்த்தையைக் கேட்டதும் நான் நடுங்கிப் போனேன் என்பதை உன்னிடம் நான் ஒளிக்காமல் சொல்லிவிடவேண்டும். அதுமாதிரிதான் சாதாரணமாக சொல்லப்படுகிற 'அணுகுண்டு' எப்படி பயங்கரமான அழிவுகளை எங்கள் நாட்டில் சில ஆண்டுகளுக்கு முன் ஏற்படுத்தியது என்பது எனக்கு நன்ருக ஞாபகம் இருக்கிறது. இதுவும்கூட அதைப்போலவே பயங்கரமான, கொடுமையான, மிருகத்தனமான, கொலைகாரத்தனமான விளைவுகளைக் கொடுக்கக்கூடியதுதானு? அது எனக்குத் தெரியவில்லை. தெரியவும் வேண்டாம்.

உனது பெரிய, பணக்கார, திறமைமிக்க குழந்தைகள் செய்யும் இந்த செயல்களைப்பற்றி நான் தெரிந்து கொள்ளவே வேண்டாம்! நான் ஒரு சாதாரண ஏழை செம்படவன்! நான் இப்பொழுது சாக விரும்பவில்லை. என்னைத் தயவு செய்து காப்பாற்று. ஆம் எப்படியாவது என்னைக் காப்பாற்று! சத்தியமாகச் சொல்லுகிறேன், நான் யாரையும் கொலை செய்ததில்லை. நான் யாருக்கும் தொந்தரவு செய்ததில்லை! நான் யாருடைய சாந்தியையும் சந்தோஷத்தையும் குலைத்ததில்லை. யாருடைய இன்பத்தையும் நான் அழித்ததில்லை. ஆம்! நான் உள்ளதை வைத்துக்கொண்டு திருப்திப்பட்டேன். எனது சிறிய வீட்டிலிருப்பதிலும் கடலில் மீன் பிடிப்பதிலும் திருப்தியாகவே இருந்தேன். என்னைக் காப்பாற்று! ஐயோ கடவுளே என்னை காப்... பா...ற்...று!!!!

ஐயோ நான் சொல்வதைக் கேட்டுவிடு, இன்னும் சிறிது நேரத்தில் என் கண்களை மூடிவிடுவேன். அப்புறம் உன் அருமையான ஆகாயத்தையும், அற்புதமான அலைகளையும் பார்க்கவேமாட்டேன்! ஜப்பானியர்களாகிய நாங்கள் அதிகமாக மீன் சாப்பிடுவது வழக்கம். எனவே நாங்கள் கொண்டுவந்த மீன்களை உண்டதன் காரணமாக எங்கள் ஊரில் பலருக்கு அந்தப் பயங்கரமான வியாதி பரவியது. ஐயோ ஆண்டவனே, எங்களது சின்னஞ் சிறுர்கள் யாரை என்ன செய்தார்கள்! இந்த எச்பாம்பைப்பற்றி அவர்களுக்கு என்ன தெரியும். ஏன் அவர்கள் காரணமின்றி மீன்களைப் போல் துடித்துடித்து மடிய வேண்டும்! அவர்கள் நிலையை நினைத்தால் எனக்கு எவ்வளவு அச்சமுண்டாகிறது? இது உனக்குத் தெரியாதா நான் ஒரு சரியான மடையன்! நான் எதனுல் சாகிறேன் என்பதே இன்னும் எனக்கு விளங்கவில்லை!... ...மனிதர்களை தங்கள் இன்பங்களிலிருந்து. மனைவி மக்களிடமிருந்து சாந்தியிலிருந்து சந்தோஷத்திலிருந்து பிரித்துக் கொல்லும் இந்தப் பயங்கர எரிமலைகளை ஏன் சிருஷ்டிக்கிருர்கள் என்று எனக்கு நீ சொல்ல மாட்டாய்? எனக்கு கொஞ்சம் புரியவைக்கமாட்டாய் ?!

அதிலிருந்து நான் சொல்ல முடியாத அவஸ்த்தைப் படுகின்றேன். 'அணு' சீக்கினுல் பாதிக்கப்பட்டிருக்கிறேனென்றும், அந்த விஷ அலைகள் என்னைப் பற்றிக்கொண்டது என்றெல்லாம் டாக்டர்கள் சொல்கிருர்கள். அது அழிந்துபோக! எனக்கு அவர்கள் சொல்வது ஒன்றுமே புரியவில்லை! ஆனுல் யாரோ சில மனிதர்கள் மேலிருந்துஅந்த சமுத்திரத்தில்எதையோ போட்டிருக்கிருர்கள். அதன் சாம்பல்தான் என்னை இப்படி கொல்லுகிறது என்று மட்டும் எனக்குப் புரியும். ஐயோ நான் சாகிறேன், ஐயையோ நான் சாகிறேன். என்னைக் காப்பாற்ற மாட்டாயா? நான்

வாழ ஆசைப்படுகிறேன். உனது அனுமதிதரும் ஆகாயத்தின் கீழ், அங்கிருக்கும் மனித ஜீவன்களோடு, எனது இன்ப துன்பங்களோடு நான் வாழ ஆசைப்படுகிறேனய்யா. பல நாட்கள் நான் வாழ ஆசைப் படுகிறேன்—ஐயோ கடவுளே! பல நா...ட்...க...ள்.

எனது வாழ் நாள் பூராவும் நான் மீன் பிடித்தேன் அந்தக் கடலிலுள்ள அத்தனை லக்ஷக் கணக்கான மீன்களும் இப்பொழுது விஷம் பட்டு இறந்தன—எத்தனை மனிதர்களுக்கு அதனால் எவ்வளவு கஷ்டம் உண்டாகிறது. எத்தனைக் குழந்தைகள் அதனால் அவதிப்படுகின்றன என்பதை நினைக்க நான் எவ்வளவு துக்கப்படுகிறேன் தெரியுமா? என் உடலிலுள்ள விஷ வியாதி மற்றவர்களையும் பீடிக்கக்கூடாதே என்பதற்காக என்னை உயிரோடேயே புதைத்து விடுவார்களா? ஐயோ கடவுளே! இந்த பயங்கரத்தை சிருஷ்டித்துவிட்ட உனது திறமைமிக்க குமாரர்களோடு நான் கொஞ்சம் பேச விரும்புகின்றேன். நான் அவர்களைப்போல அவ்வளவு பெரிய மனிதனல்ல. எனவே மிக சாதாரணமான கேள்விகளைத் தான் கேட்பேன். இந்த நாசகரமானவற்றையெல்லாம் சிருஷ்டித்த ஏ சக்திமிருந்த புத்திசாலியே! ஒரு காரணமுமின்றி உன் மனைவியையும், குழந்தைகளையும் யாராவது கொன்ருல் நீ என்ன செய்வாய்? அல்லது உன் வீட்டு வாசற்படியிலே யாராவது காரணமின்றி தீ மூட்டினுல் நீ என்ன செய்வாய்? அவனை நீ சபிக்கமாட்டாய்? அவனை நீ வெறுக்கமாட்டாய்? உனது சொந்தக் குளத்தில் குளித்துக்கொண்டிருக்கும் உன் குழந்தையை யாருவது ஒரு கொலைபாதகன் கொன்றுவிட்டால் நீ என்ன செய்வாய்? அவனை சபித்து நீ தண்டிக்கமாட்டாய்? ஆனுல் பணக்காரனை உனக்கு, சக்தி மிகுந்தவனை உனக்கு, திறமைசாலியான உனக்கு ஒரு சாதாரண செம்படவனை நான் புத்தி சொல்வதானுல் எனக்கு என்ன நெஞ்சழுத்தம் என்று உனக்குத் தோன்றுகிறதோ, என்னவோ? என்னதான் இருந்தாலும் நானும் மனிதன்தானே? அதை கூடவா நீ மறுத்துவிடுவாய்? நீ எப்படி உன் உற்ருரையும் உறவினரையும் நேசிக்கிருயோ அப்படியேதான் நானும் என் உற்ருரையும் உறவினர்களையும் நேசிக்கிறேன். நீ எப்படி கட்வுளை கும்பிடுகிருயோ (நீ செய்வாய் என்றுதான் நினைக்கிறேன்!) அப்படித்தான் நானும் கும்பிடுகிறேன். நான் ஒரு மனிதன். ஆம். மீனல்ல, கினியா பன்றியல்ல, அல்லது ஒரு பொம்மையல்ல சில டாலர்களுக்கு விலைக்கு வாங்கிவிட. ஓ பெரிய மனிதனே! இது உனக்குத் தெரியாதா? இந்த பூமியிலுதித்த ஒவ்வொருவருடைய உயிரும் அருமையானதுதான் விலைமதிப்பற்றதுதான்! ஒரு

வேளை உனக்குத் தெரியாதோ என்னவோ—ஏழை செம்படவனுக இருந்தாலும்கூட அது எனக்குத் தெரியும்......

ஐயோ கடவுளே! நான் சாகிறேன். நான் பலமாகக் கதறி அழவேண்டுமென விரும்புகின்றேன். ஆனல் என்னல் முடியவில்லை. அந்த அளவுக்கு நான் பலஹீனனுக இருக்கின்றேன். என் உடம்பெல்லாம் எவ்வளவு வேதனை. எங்களைப்போன்ற ஏழைகளை இப்படிவருத்துவதில் ஏன் அவர்கள் இவ்வளவு அக்கரை காட்டவேண்டும் என்பது எனக்குப் புரியவே இல்லை. ஐயோ நான் இளைத்துவிட்டேன். எனது இதயம் நின்றுவிடுவதுபோலவும், எனது ரத்தமெல்லாம் உறைவது போலவும் எனக்குத் தோன்றுகிறது. அப்படியானல் நான் செத்துக் கொண்டிருக்கின்றேனு? இது தான் சாவா? என்னல் பேசமுடியவில்லை. என்னல் எதையும் பார்க்கமுடியவில்லை. யார் யாரோ கெட்டிக்கார டாக்டர்கள், மிக வேண்டியவர்கள் எல்லோரும் என் படுக்கையருகே சூழ்ந்து நிற்கின்றுர்கள். ஐயோ ஆண்டவனே! எல்லோரும் ஆமாம் எல்லோரும் செத்துக் கொண்டிருக்கும் ஒளியிழந்த கண்களுக்கு மங்கலாகத்தான் தெரிகின்றனர். நான் அடிபட்ட சிறு குழந்தையைப் போல் எனது துக்கமெல்லாம் வெளிப்பட அலறி அழ விரும்புகின்றேன்! ஐயோ என்னல் முடியவில்லையே!

எனக்கு இப்பொழுது நிச்சயமாகத் தெரிகிறது. நான் செத்துக் கொண்டுதான் இருக்கின்றேன். இன்னும் சில விநாடிகளில்—எனது பூமியை, ஆகாயத்தை, கடலை, வீட்டை உற்றார் உறவினரை—நான் விட்டுப் பிரியவேண்டும் ஐயோ ஆண்டவனே. முடியாது என்னல் முடியாது. அதை நினைத்தாலே பயங்கரமாக இருக்கிறது. கொடூரமாக இருக்கிறது. நான் எதற்காக இத்தனையையும் இவ்வளவு விரைவில் இழக்கவேண்டும். ஒரு சாதாரண செம்படவன் எப்படி இந்த உலகத்தை விரும்புகிறுன், எவ்வளவு அனுபவிக்க எண்ணுகிறுன் என்பது உனக்குத் தெரியாதா? இவை அத்தனையையும் ஏன் அவன் அகால மரணத்தால் இழக்கவேண்டும்—வாழ்வதற்குள்ள ம்ந்தர்ப்பங்கள் அனேகமிருக்க அவன் ஏன் அவசியமின்றிச் சாகவேண்டும். நான் சாவதற்கு முன்னல்—என்னை நீ காப்பாற்றமாட்டாய் இல்லை, இல்லை. உன்னல் முடியாது!—நான் உன்னிடம் ஒரு விஷயத்தை ரகசியமாக சொல்லிவிட விரும்புகின்றேன். நான் எதனல் இப்பொழுது செத்துக் கொண்டிருக்கின்றேனே அதனல் இந்த உலகம் பூராவையுமே—ஆண் பெண் குழந்தைகள் அத்தனையையும், விளையாட்டு, சந்தோஷம், ஆடல் பாடல் அத்தனையையும்—அறுத்துவிட முடியும் என்று சொல்லுகின்றுர்களே, ஐயய்யோ ஆண்டவனே இதையெல்லாம் நீ

அனுமதிக்கப்போகிருயா? இந்த அவசரச் செய்தியைக் கேட்கும் பொழுதே நான் நடுங்குகின்றேனே. கடவுளே கண்டிப்பாக இந்த உலகத்தைக் காப்பாற்று என்னை உன்னுல் காப்பாற்ற முடியாவிட்டாலும்கூட நீ அவர்களைக் காப்பாற்றிவிடு. நான் ஏழை செம்படவனுலும்கூட சுயநலக்காரனல்ல. இனி நான் இருந்தாலும் இறந்தாலும் ஒன்றுதான். எப்படி யிருந்தாலும் நான் விரும்பி நேசிக்கும் அவர்களையாவது காப்பாற்றி விடு. பச்சைப் பசேல் என்ற புல் வெளியை, ஒளிதரும் மலைகளை, பாடும் ஆறுகளை, சிரிக்கும் பெண்களை, காதலிக்கும் இதயங்களை, நடனமாடும் குழந்தைகளை, மலர்ச் செடிகளை, பழத் தோட்டங்களை, குளிர்ந்த தண்ணீரை, இதந்தரும் வீடுகளை, பாட்டை, சங்கீதத்தை புன்சிரிப்பை, அழகை, இவைகளையெல்லாம் காப்பாற்றிவிடு. என்னைப்போல் இவைகளையும் சாகடித்துவிடாதே. ஆம் அவர்களை உயிரோடு வைத்திரு. அவர்களை சுகமாக வைத்திரு. எப்பொழுதுமே அவர்களை புன்முறுவலோடும், புளகாங்கிதத்தோடும் இருக்க வை. திகைக்க வைக்கும் பூதத்தின் இந்த கொடிய செய்கையின் காரணமாக பாதிக்கப்பட்ட முதல் மனிதன் நான்தான். நானே கடைசி மனிதனுகவும் இருக்கட்டும். இனியாரையுமே இந்த விஷப் பரீட்சைக்கு ஆளாக்காதே!

கடைசியாக ஒரு சிறிய விஷயம். அதற்கு மாத்திரம் பதில் சொல்லிவிடு. இதற்கு பதிலளிப்பதை நீ சிரமமாகக் கருதமாட்டாய் என்று நம்புகின்றேன். மனிதர்களிலே மிக உன்னதமானவர்களான, அனைவரையும் நேசிக்கும் உளம் படைத்த புத்தர் போன்றவர்களையும் ஏசுநாதர் போன்றவர்களையும் நீதானே படைத்தாய். பின் அவர்களோடு கூடவே இப்படிப்பட்ட கொடிய நாசம் விளைவிக்கும் கொலைகாரர்களையும் ஏன் படைத்தாய்? நான் ஒரு முட்டாள், உன்னைப்போய் இதைக் கேட்கின்றேனே! உனது படைப்பின் மர்மத்தை என்னுல் புரிந்து கொள்ள முடியவில்லை! இருப்பினும், கடவுளே என் இந்தக் கேள்விக்கு நீ பதில் சொல்ல மாட்டாயா!

ஆனுல், ஆமாம்! அதுதான் நான் நினைத்தது. எனக்கு எப்படியோ இருக்கிறது! ஐயோ பயங்கரமா யிருக்கிறது. எனக்கு எப்படி இருக்கிறது என்பதே எனக்கு விளங்கவில்லை. ஆம். இப்பொழுது எனக்கு எந்தவிதமான உணர்வுகளுமே இல்லை. ஆம். இந்த உலகத்தை விட்டுப் போகிறேன். இதிலுள்ள இனிமைகளையெல்லாம் விட்டுப் போகிறேன். இப்பொழுது நான் செத்துக்கொண் டிருக்கிறேன். ஐயோ கடவுளே, உன்னுல் என்னைக் காப்பாற்ற முடியவில்லையே. எனது உயிர் போகிறது... உயிர் போகிறது...உயிர் போ... கி...ற...து!

●

தாய் மொழி மூலம்தான் கல்வி போதிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை இன்று பலமாகி வருகிறது. சமீபத்தில் சென்னை சர்வகலாசாலை சிண்டிகேட் இந்தப் பிரச்னை பற்றி முக்கியமான முடிவுகள் எடுத்திருக்கிறது. இந்த முடிவுகளை அலசி ஆராய்கிறது இந்தக் கட்டுரை.

மொழித் தகருறு

ஆர். கார்த்திகைவேலு

●

இந்திய அரசியல், கலாச்சார, சமூக வாழ்வில், நாட்டின் பல்வேறு மொழிகளும், பரஸ்பரம் வகிக்கவேண்டிய ஸ்தானம் பற்றிய தகருறு சமீப காலத்தில் பெரிதும் வளர்ந்துள்ளது. நாட்டின் பொருளாதார, சமூக, கலாச்சார வாழ்வைக் குலைத்து, வளர்ச்சிக்குத் தடையாக விளங்கிய அன்னிய ஆட்சி அகற்றப் பட்ட பின், ஸ்தம்பித்திருந்த வாழ்வை வளம் பெற்றதாக்கி சகல துறைகளிலும் முன்னேற வேண்டுமென்னும் பேரவா மக்களிடம் தோன்றியுள்ளது. அத்தகைய முன்னேற்றத்தில், தத்தம் தாய்மொழிகள் வளர்க்கப்பட்டு, அவற்றிற்கு உரிய இடங்களில் அமர்த்தப்பட வேண்டுமென்னும் ஆர்வமும் உண்டாக்கியுள்ளது. இவ்வுயரிய ஆர்வத்தினுல் இத்தகராறு தோன்றிவிடவில்லை. ஆனுல், இந்த ஆர்வத்தைப்பயன்படுத்திக்கொண்டு பல சக்திகள் பல்வேறு பிரச்னைகளை எழுப்பி, மக்கள் மத்தியில் கசப்பையும், ஐயப்பாடுகளையும் உண்டாக்கியதால்தான் இந்த மொழித் தகராறு மிகப்பெரிய பிரச்னையாக இன்று காட்சியளிக்கின்றது. எனினும், இது தீர்க்கப்பட முடியாத ஒன்றல்ல. நாட்டின் வளர்ச்சியையும், பன்மொழி பேசும் மக்கள் பகுதியினர் அனைவரின் நலன்களையும் அடிப்படையாகக் கொண்டு இப்பிரச்னை அணுகப்படுமாயின், நல்லதோர் முறையிலே இதைத் தீர்ப்பதற்கான வழி காண இயலும்.

இவ்வழி என்ன என்பதை ஆராயப் புகுமுன் உண்மையில் பிரச்னை என்ன என்பதைப் பற்றியே நமக்கு ஒரு தெளிவு தேவை. அன்னிய ஆட்சியில் ஆங்கிலம் நிர்வாக மொழியாகவும், கல்வியின் சகல மட்டங்களிலும் போதனு மொழியா

கவும் ஆதிக்கம் செலுத்தியது, இதன் விளைவாக நம் நாட்டு மொழிகள் அனைத்தும் வளர்ச்சி யடைவது தடுக்கப்பட்டு, ஸ்தம் பிக்கும் நிலை தோன்றியதென் பதை யாரும் மறுக்கமுடியாது. இதனால் நாட்டின் சமூக, கலாச் சார வாழ்வின் வளர்ச்சி முடக் கப்பட்ட சோகக்கதையை எண் ணிப் பார்க்கின் இதயம் குமு றும். எனவே இத்தகைய இழி நிலை ஏற்படுவதற்குக் காரண மான அன்னிய ஆட்சி அகற்றப் பட்டவுடன், இத்தகைய மொழி ஆதிக்கம் எம்முறையிலும் ஏற் படுவது அனுமதிக்கக் கூடாது எனும் கருத்து மக்களிடத்தில் தோன்றியது இயல்பேயாகும். அத்துடன் வேற்று மொழியான ஆங்கிலம் வகித்த அந்தஸ்தி லிருந்து அதை அகற்றி, அந்த இடத்தில் இந்திய மொழிகள் அமர்த்தப்பட வேண்டுமென் னும் விருப்பமும் உண்டாகியுள் ளது.

இதன் விளைவுதான் இன்று மாநில மொழிகள் ஆட்சிமொழி யாகவும், சகல மட்டங்களிலும் போதன மொழியாகவும் ஆக்கப் படவேண்டுமென்ற நியாயமான கோரிக்கை எழுந்துள்ளது. ஆனால் அதே நேரத்தில், பன் மொழி பேசும் மாநிலப் பரப்பு களின் ஐக்கிய குடியரசாக இந் தியா விளங்குவதால், மத்திய நிர்வாகத்தின் மொழியாக இந் திய மொழிகளில் ஒன்று தேர்ந் தெடுக்கப்பட்டது. அதுதான் ஹிந்தி. எனவே இப்பொழுது உண்மையில் பிரச்னை என்ன வெனில், மத்திய நிர்வாக மொழிக்கிருக்க வேண்டிய இடம் என்ன என்பதைப்பற்றி நிர்ண யிப்பதுதான். ஆனால் ஏற்க னவே குறிப்பிட்டுள்ளது போன்று பல சக்திகள் பல் வேறு காரணங்களால் இப்பிரச் னையைப் பெரிதாக்கியுள்ள தால், தீர்வு காண்பது அவ் வளவு சுலபமானதாக நமக் குத் தோன்றுவதில்லை. குறிப் பாக ஹிந்தியும், இதர மாநில மொழிகளும், ஆங்கிலமும் வகிக்க வேண்டிய பரஸ் பர இடம்பற்றி இவர்கள் பல வித கருத்துக்களைக்கூறி குழப் பத்தை உண்டாக்கியுள்ளனர்.

இப்படிக் குழப்பப்பட்டுள்ள பிரச்னையைத் தீர்ப்பதற்கான வழிவகைகள் காண பொதுவாக அங்கீகரிக்கப்பட்டுள்ள பல ஜன நாயகக் கோட்பாடுகளை இச்சந் தர்ப்பத்தில் ஞாபகப்படுத்திக் கொள்வது நல்லது. ஒரு ஜன நாயக அமைப்பில், அதன் நிர் வாகத்திலும், அரசியலிலும் பெரும்பகுதி மக்கள் பங்கு கொள்வதன்மூலம் தான் அதை உண்மையான ஜனநாயக அமைப்பாக மாற்றமுடியும். அவ் விதம் மக்கள் பெருமளவில் பங்குகொள்ள வேண்டுமாயின் ஆட்சி மொழியானது அவர்க ளின் மொழியாகவே இருத்தல் வேண்டும். அத்துடன் அந்த ஜனநாயக ஆட்சியில் மக்கள் உண்மையில் பங்குகொள்ள வேண்டுமாயின் அவர்களின் அஞ்ஞானம் ஒழிக்கப்பட்டு, விரும்பும்வரை கல்வி பயில

வாய்ப்புகள் அளிக்கப்படவேண்டும். இவ்விதம் வெகுஜனக் கல்வி அளிக்கப்பட வேண்டுமாயின், அஞ்ஞானம் பூரணமாக அகற்றப்பட வேண்டுமாயின், போதனுமொழி தாய் மொழியாக அன்றி வேறெதுவாகவு மிருக்க இயலாது. ஏனெனில்குழந்தைப் பிராய முதல் வீட்டிலும், மற்றும் வெளியிலும் பேசும் மொழியிலே தான் கல்வியைச் சுலபமாகப் பெறமுடியும் என்பது கல்வித் துறையிலே பழுத்த அனுபவம் பெற்றவர்களின் உறுதியான கூற்று. எனவே போதனுமொழி சகல மட்டங்களிலேயும் தாய் மொழியாகத் தானிருக்க வேண்டும் என்பதிலே எள்ளளவும் ஐய மிருக்கமுடியாது.

ஆனல் கோட்பாட்டினடிப் படையில் இது ஏற்கப்பட்டிருப் பினும், நடைமுறையில் இதற்கு உலை வைக்க, அல்லது மாநில மொழிகள் தமக்குரிய இடத்தை வகிப்பதைத் தள்ளிப்போடப் பெரு முயற்சிகள் எடுக்கப்படு கின்றன. 'மொழி வளமின்மை' என்ற பேரால் ஆங்கிலம் இன்று வகிக்கும் அந்தஸ்தை நீடித்து வகிக்கவேண்டுமென்று ஒரு சாராரும், 'இந்திய ஐக்கியம்' என்ற பேரால் ஹிந்தி, ஆங்கிலம் வகுக்குமிடத்தில் அமர்த்தப்பட வேண்டுமென்று மற்ருெரு கூட்டமும் நாள் தவருமல் மாபெரும் பிரச்சாரத்தை நடத்தி வருகின்றனர். இவ்விரு கூட்டம்தான் உண்மையில் இம் மொழிப் பிரச்னையைச் சிக்கலான தாக்கி, மக்களிடையே குழப்பத் தையும், மனக் கசப்பையும் உண்டாக்கி யுள்ளன.

இந்தியக் குடியரசுச் சட்டம் கூறியுள்ளதெல்லாம், ஹிந்தி மத்திய அரசாங்க மொழியாக இருக்கும் என்பதுதான். (இந்தியக் குடியரசுச் சட்டம், விதி 343.) ஆயினும், மேற் குறிப்பிட்டுள்ள இரு சாராரும் தத்தமக்குகந்த முறையிலே இதற்கு வியாக்கியான மளித்து வருகின்றனர். இந்நிலையில் இந்தியப் பல்கலைக் கழகங்களின் நடவடிக்கைகளை ஒருமுகப் படுத்துவதற்காக உள்ள குழுவானது, மத்திய அரசாங்க வேலைகளுக்கான தேர்வுகளில் ஹிந்தி மொழியை உபயோகப் படுத்தலாமா என்பது பற்றி பல்கலைக் கழகங்களின் கருத்துக்களைத் தெரிவிக்குமாறு சுற்றறிக்கை ஒன்று விடுத்துள்ளது. அத்துடன் குடியரசுச் சட்டத்தின் 344வது விதியின்படி, ஹிந்தியைப் படிப்படியாக மத்திய ஆட்சி மொழியாக மாற்றுவது பற்றியும், இதர பல சம்பந்தப் பட்ட பிரச்னைகள் பற்றியும் ஆராய்ந்து, ஆலோசனைகள் கூறுவதற்காக மத்திய அரசாங்கம் நியமித்துள்ள மொழி ஆராய்ச்சிக் கமிஷனும், ஏறத்தாழ இதுபோன்ற ஒரு கேள்வியைத் தன் வினுத்தாளிலே கொடுத்துள்ளது. அத்துடன் இந்தியப் பாராளுமன்றத்திலும், மாநில சட்ட சபைகளிலும் உபயோகப்படுத்தவேண்டிய மொழி ஹிந்தியா, மாநில மொழியா

என்றும் அக் கமிஷன் கோரி யுள்ளது.

உண்மையில் மேலே எழுப்பி யுள்ள பிரச்னைகள் நாட்டின் எதிர்காலத்தைப் பெரிதும் பாதிப்பவையாகும். எனவே இவற்றில் மக்கள் பெரிதும் அக்கறை காட்டி, தீர விவாதித்து ஓர் முடிவுக்கு வரவேண்டுவது அவசியமாகும். இப்பிரச்னைகள் அனைத்தையும்பற்றி சென்னைப் பல்கலைக் கழகத்தின் நிர்வாகக் குழு (ஸிண்டிகேட்) சமீபத்தில் வெளியிட்டுள்ள கருத்துக்கள் ஆழ்ந்து பரிசீலிக்கப்பட வேண்டியவையாகும். அவற்றின் சுருக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1. மத்திய அரசாங்க வேலைகளுக்கு ஆட்கள் தேர்ந்தெடுக்கும் தேர்வில், இன்று தேர்வு மொழியாக ஆங்கிலம் உபயோகப்படுவது நீக்கப்பட்டு, ஹிந்தி உபயோகிக்கப்பட வேண்டுமென்று கூறுவது ஹிந்தி பேசாத பிரதேசங்களிலுள்ளவர்களுக்கு, குறிப்பாகத் தென்னிந்தியர்களுக்கு, பாதகம் விளைவிக்கும். எனவே, ஹிந்தியுடன், ஆங்கிலமும் உபயோகிக்கப்படவேண்டும். மாநில மொழிகள் வளர்ச்சியடைத்து, பல்கலைக் கழகப் போதனைமொழிகளாகவும் ஆகும் நிலை வரும்பொழுது, ஆங்கிலத்திற்குப் பதில், மாநில மொழிகளே உபயோகிக்கப்படவேண்டும்.

2. மத்திய அரசாங்க வேலைகளில் சேர்ந்தபின், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் ஹிந்தி தெரியாதவர்கள் அதைக் கற்று ஒரு தேர்தலில் தேறவேண்டுமென்று நிர்ணயிக்கலாம். ஹிந்தி பேசாத இடங்களில், இதர மாநில மொழிகள் ஆட்சிமொழியாகும்பொழுது, அம்மாநில சர்க்கார் மத்திய அரசாங்கத்துடன் நடத்தவேண்டிய அலுவல்களுக்கு மட்டும் ஹிந்தி தெரிந்தவர்களை நியமிக்கலாம்.

3. பாராளுமன்றத்தில் ஹிந்திமட்டுமல்லாமல், இதர இந்திய மொழிகளனைத்தும், அதாவது குடியரசுச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள 14 மொழிகளிலும், பேசுவதற்கு அனுமதிக்க வேண்டும். அத்துடன் ஒருவர் தம் மொழியில் பேசும்பொழுது, ஏககாலத்தில் இதர மொழிகளில் அப்பேச்சு மொழி பெயர்க்கப்படுவதற்கான வசதிகள் செய்யப்படவேண்டும். இம்முறை சர்வதேச மாநாடுகளில் பின்பற்றப்படுகிறது. ஆனால் மாநில சட்ட சபைகளில் அம்மாநில மொழியே உபயோகிக்கப்பட வேண்டும்.

4. பல்கலைக் கழகங்களில் இன்று ஆங்கிலம் நீடிப்பது படிப்படியாக—அதாவது மாநில மொழிகள் தக்க வளம்பெற்றவுடன்—அகற்றி, மாநில மொழிகளை போதனை மொழிகளாக்க வேண்டும். ஒரு பல்கலைக் கழகத்திலிருந்து மற்றொரு பல்கலைக் கழகத்திற்குச் செல்வோரின் எண்ணிக்கை குறைவானதால், ஒரே மொழி இந்தியா முழுவதற்கும் இருக்கவேண்டிய அவசியமில்லை.

5. ஹிந்தியை கட்டாயமாகப்

படிக்குமாறு நிர்ப்பந்திக்கக் கூடாது. விரும்பிப் படிப்பவர்களுக்குத் தக்க வசதியளிக்க வேண்டும்.

6. இறுதியாக ஆங்கிலம் உடனடியாக நீக்கப்பட்டால் குழப்பமும், அனர்த்தமுமே விளையுமாதலால், ஆட்சி மொழியாகவே ஆங்கிலம் இன்னும் 25 ஆண்டுகளுக்கு இருக்கவேண்டும். உயர்தர நீதி மன்றம், சட்டசபைகள் ஆகியவற்றில் இன்னும் கூட அதிக காலத்திற்குஆங்கிலத்தை உபயோகிக்கவேண்டும்.

இக்கருத்துக்கள் யாவும் பெரிதும் பல பத்திரிக்கைகளால் வரவேற்கப்பட்டுள்ளன. இவற்றில் பல, உண்மையிலே மொழிப்பிரச்னையைத் தீர்ப்பதற்குப் பெரிதும் உதவிகரமாக இருக்குமென்பதில் ஐயமில்லை. குறிப்பாக ஹிந்தி வகிக்கவேண்டிய ஸ்தானம் பற்றியும், மாநில மொழிகள் உண்மையில் வகிக்கவேண்டிய இடம்பற்றியும் கொடுத்துள்ள ஆலோசனைகள் சரியானவையாகும் என்பதில் ஐயமுல்லை. ஆனால் ஆங்கிலம் வகிக்கவேண்டிய பங்கு பற்றி அவர்கள் கூறும் கருத்துக்கள் உண்மையில் நம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. பல்கலைக் கழக நிர்வாகக் குழு இப்பிரச்னைபற்றி மேற்கூறிய கருத்துக்களைக் கொண்டிருப்பது ஆச்சரியமல்ல ஏனெனில், அதில் பெரும்பாலோர், பல்கலைக் கழகத் துணைத்தலைவர் உட்பட, ஆங்கிலம் இன்று வகிக்கும் ஆதிக்கம் தொடர்ந்து பல ஆண்டுகள் இருக்கவேண்டும் என்னும் கருத்துடையவர்கள். மாநில மொழிகள் போதனை மொழிகளாகவும், ஆட்சி மொழிகளாகவும் வளர்ச்சி யடைவதற்குப் பல்லாண்டுகளாகும் எனும் உறுதியான கருத்துடையவர்கள். ஆனால், தாய் மொழி வளர்ச்சியில், நாட்டின் சமூக, கலாச்சார, வளர்ச்சியில் பேரார்வம் கொண்டவர்கள் இந்நிலையை எற்க இயலாது.

மாநில மொழிகள் பூரணமாக ஆட்சி மொழியாகவும், போதனை மொழியாகவும் வளர்ச்சியடைய சில காலம் பிடிக்கும் என்பது உண்மையே. ஆனால் அதற்காக நீண்ட நெடுங்காலம் ஆங்கிலமே அத்தகைய பணியை ஆற்றவேண்டுமென்று கூறுவது ஏற்கத் தகுந்ததல்ல.

அதிலும், குறிப்பாக இன்று கல்லூரிகளிலே பயிலும் மாணவர்கள் மொழி புரியாததால் பெரும் தொல்லைகளுக்காளாகி, கல்லூரிகளில் கல்வியின் தரம் குறைந்துள்ளது என நேரடி அனுபவம் பெற்ற ஆசிரியர்கள் கூறுகின்றனர். மேற்கூறிய தீர்மானம் வெளிவந்த மறுதினம் சென்னையில் நடந்த ஓர் கூட்டத்தில், சென்னை தியாகராயர் கல்லூரித் தலைவர் திரு. ஷண்முகம், குறுகிய காலத்தில் ஆங்கிலம் அகற்றப்பட்டு, மாநில மொழி போதனை மொழியானல் தான் கல்வியின் தரத்தை உண்மையிலேயே உயர்த்த முடியும் என்று கூறியுள்ளார். இது அவருக்குப் பின் பேசிய பல கல்லூ

ரிப் பேராசிரியர்களால் ஆமோதிக்கப்பட்டுள்ளது.

எனவே ஆங்கில மோகம் நம் பார்வையின் கூர்மையை மழுங்கடிக்க விடக்கூடாது. விரைவில் மாநில மொழிகள் போதனு மொழியாகவும், ஆட்சி மொழியாகவும் ஆக ஆவன செய்ய வேண்டும். முன்னுள்ள முட்டுக்கட்டைகள் தீர்க்கப்படாதவைகளல்ல. அதனுடன் பிற மொழிகளிலுள்ள, குறிப்பாக சர்வதேச ரீதியில் வழங்கி வரும் பல விஞ்ஞான சொற்ருெடர்களும், சொற்களும் நம் மொழியிலும் தொடர்ந்து கையாளுவதில் யாதொரு குற்றமுமில்லை. மொழியும் பாழாகி விடாது. உண்மையில் நம் நாட்டிலுள்ள எல்லா மொழிகளுமே குறிப்பிட்ட சரித்திர வளர்ச்சியின் காரணமாக, ஆங்கிலம் போன்று வளர்ச்சியடையவில்லை. ஆனல் வளர்ச்சியடையவில்லையே என்று கூறிக் கொண்டே யிருந்தால் மொழி வளர்ந்துவிடாது. அதற்கான வழிவகைகளை வகுத்து, திட்டமிட்டு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். எனவே ஒரு குறுகிய காலவரையறைக்குள் மாநில மொழிகள் போதனு மொழியாகவும், ஆட்சி மொழியாகவும். ஆக்கப்பட திட்டவட்டமான உறுதிமொழியும் நடவடிக்கைகளும் உடனடித் தேவையாகும்.

இச் சந்தர்ப்பத்தில் நீண்ட நாட்களுக்குமுன் காந்திஜி கூறியதை ஞாபகப் படுத்திக் கொள்வது நல்லது. "எனக்கு ஒரு சர்வாதிகாரியின் அதிகாரங்களிருப்பின் இன்று அந்நிய மொழியின்மூலம் நம் ஆண்களுக்கும், பெண்களுக்கும் பாட போதனை செய்வதை உடனே நிறுத்தி, இந்த மாற்றத்தை உடனடியாக அமுலுக்குக் கொண்டுவராவிடில் வேலையிலிருந்து நீக்கப்படுவார்கள் என்ற உத்தரவின்மூலம், ஆசிரியர்களையும், பேராசிரியர்களையும் இம் மாற்றத்தைப் புகுத்தச் செய்வேன். பாடப் புத்தகங்கள் தயாரிக்கப் படுவதற்காக நான் காத்திருக்கமாட்டேன். கடுமையானமுறையைக்கையாண்டு தீர்க்கப்பட வேண்டிய வியாதி அது", என 'யங் இந்தியா' பத்திரிகையில் 1-9-1921ல் எழுதியுள்ளார். ஏறத்தாழ இந்த அடிப்படையிலேயே ராஜாஜி தமிழை போதனு மொழியாக பள்ளிகளில் 1938ல் புகுத்தினர். எனவே "மொழி வளர்ச்சியடையும் வரைவாளா விருக்கவேண்டும்; அந்நியமொழி தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தவேண்டும்" என்னும் கருத்துக்கள் கடுமையாக எதிர்க்கப்பட வேண்டும்.

இதிலிருந்து இந்தியைக் கட்டாயமாகத் திணிக்க, வரையறுக்கப்பட்டுள்ள அந்தஸ்துக்குமேல் ஆதறகளித்து மாநில மொழிகளின் வளர்ச்சிக்குத் தடைபோடச் செய்யும் முயற்சிகளை எதிர்க்க வேண்டுவதெவ்வளவு அவசியமோ, அதைவிட அவசியம், ஆங்கிலத்தை விரைவில் அகற்றி, மாநில மொழிகளை அப்பீடத்தில் வைக்க வேண்டுவது. தமிழ்போன்ற தொன்மையான மொழி புதிய தேவைக

களுக்கேற்ப வளர்க்கப்படுவது இதன் மூலம்தான். பாரதி அறை கூவியது போல எட்டுத்திக்கும் சென்று கலைச் செல்வங்களை கொணர்ந்திங்கு சேர்த்து வள மிக்க மொழியாகத் தமிழை ஆக்கி, ஆட்சிபிடத்திலே அமர்த்த வேண்டிய மாபெரும் பொறுப்பு தமிழர்களுடையது. தமிழறிஞர்களும், நாவலர்களும் இதரர்களின் ஒத்துழைப்புடன் இம்மாபெரும் பணியை விரைவில் சிறப்புடன் ஆற்றி, புதிய தமிழகத்தில் தமிழிற்குரிய சிறந்த இடத்தைத் தேடித்தர வேண்டுமென்பது தமிழர்களனைவரின் பேரவா. இதேபோன்று ஒவ்வொரு மாநில மொழியும் தத்தமக்குரிய இடத்தில் அமர்த்தப்படின் அதன்மூலம் மொழிப் பிரச்னை தீர்க்கப்படுவதுமட்டுமின்றி, இந்திய ஐக்கியமும் உறுதியான அஸ்திவாரத்துடன் அமையும் என்பதில் ஐயமில்லை.

O

கல்விக்குரிய மொழி

தமிழ் நாட்டில் உண்மையான கல்வி பரவவேண்டுமானால், சகல சாஸ்திரங்களும் தமிழ் பாஷை மூலமாகவே கற்றுக் கொடுக்க வேண்டுமென்ற கொள்கையை நமக்குள்ளே அறிவுடையோரெல்லோரும் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதை அனுசரணைக்குக் கொண்டுவருவதற்குத் தக்கபடி நமக்குள்ளே சக்தி பிறக்கவில்லை. ஐரோப்பிய ஸ்திரீயாகிய மிஸ்ஸஸ் பெஸண்ட் கூடச் சில தினங்களின் முன்பு பெங்களூரில் செய்த பிரசங்கமொன்றில் தமிழ் பாஷையை மிகவும் வியந்து கூறி, நாமெல்லோரும் தமிழ்ப் பயிற்சியில் தக்கபடி சிந்தை செலுத்தாமல் இருப்பது பற்றி வருத்தப்பட்டதாகத் தெரிகிறது. இப்படி நம்மைப் பார்த்துப் பிறர் இரக்கப்படும்படியான அவமான நிலை விரைவில் நீங்கவேண்டுமென்று தேவர்களை வணங்குகிறோம்.

—பாரதி
8-3-1916.

தாய் மொழி மூலம் கல்வி போதிப்பது இயலாத காரியம் என்று கூறிய ஒரு அறிஞருக்கு மகாகவி பாரதியார் கொடுத்த சூடுதான் இந்தக் கட்டுரை. திரு. பெ. தூரன் அவர்களால் தொகுத்து வெளியிடப்பட்ட 'பாரதி தமிழ்' என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.

தமிழ்

சி. சுப்ரமணிய பாரதி

கல்கத்தாவிலிருந்து வெளிப்படும் 'மாடர்ன் ரெவ்யூ' என்ற மாதப் பத்திரிகையின் தை-மாசி சஞ்சிகையை நேற்றுப் பொழுதுபோக்கின் பொருட்டாகத் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்தேன். அதிலே திருநெல்வேலி ஹிந்து காலேஜ் சரித்திர பண்டிதர் ஸ்ரீ நீலகண்டையர் ஒரு சிறிய கடிதமெழுதியிருக்கிறார். ஏற்கனவே மேற்படி பத்திரிகையில் ஸ்ரீ யதுநாத ஸர்க்கார் என்ற வித்வான் எழுதியிருந்த சில வார்த்தைகளைக் குறித்து ஐயர் தமது கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்.

கலாசாலையிலே சரித்திரப் பாடங்களை இங்கிலீஷில் கற்றுக் கொடுப்பது பயனில்லாத வீண் தொல்லையாக முடிகிறதென்றும் தேச பாஷைகளிலே கற்றுக் கொடுத்தால் நல்ல பயன் விளையுமென்றும் ஸ்ரீ ஸர்க்கார் தமது அனுபவத்திலே கண்ட செய்தியைச் சொன்னார். அதற்கு நமது திருநெல்வேலி பண்டிதர் சொல்கிறார்: "பாஷைத் தொல்லை பெருந் தொல்லையாகவே இருக்கிறது. ஆனால், எனது ஜில்லா, எனது காலேஜ் சம்பந்தப்பட்ட வரையிலே பிள்ளைகளுக்குச் சரித்திரப் பாடம் இங்கிலீஷிலே கற்றுக்கொடுப்பதைக் காட்டிலும் தேச பாஷையில் கற்றுக்கொடுப்பது அதிகப் பயன்படுமென்று சொல்வதற்கில்லை. எனது மாணாக்கர்களிலே பெரும்பாலோர் இங்கிலீஷ் இலக்கணப் பிழைகளும் வழக்குப் பிழைகளும் நிறையச்செய்தபோதிலும்மொத்தத்திலே தமிழைக்காட்டிலும் இங்கிலீஷை நன்றாக எழுதுகிறார்கள். சரித்திர விஷயங்களை விவஹரிக்கும்போது எனக்கும் இங்கிலீஷ்தான் தமிழைக் காட்டிலும் நன்றாகச் சொல்ல வருகிறது."

இங்ஙனம் எழுதுகிற ஸ்ரீ நீல

கண்டையரின் நிலைமையை நினைத்து நான் மிகவும் வருத்தப்படுகிறேன். சொந்த பாஷை-யை நேரே பேசத் தெரியாதவர்கள் சாஸ்திர பாடங்கள் நடத்தும் விநோதத்தை இந்தத் தேசத்திலேதான் பார்த்தோம். புதுமை! புதுமை!! புதுமை!!!

மேலும், இவர் தமக்குத் தாய் மொழி தெரியாதென்ற செய்தியை வங்கப் பத்திரிகைக்கு ஏன் எழுதப்போனார் என்பது எனக்கு அர்த்தமாகவில்லை. ஜப்பானியர், சீனர், நார்வேக்காரர், ஸ்விஸ் ஜாதியார், இத்தாலி தேசத்தார், ஹாலந்துக்காரர் முதலிய உலகத்து ஜாதியாரெல்லாம் நம்மை அறிவிலும் சாஸ்திரங்களிலும் பாஷைத் திறமையிலும் தாழ்வென்று நினைத்து வந்தார்கள். இப்போதுதான் ஹிந்து ஜாதியாராகிய நாம் காட்டு மனிதரில்லை, வால் இல்லாத குரங்குகளில்லை. நமக்குப் பாஷைகள் இருக்கின்றன; நமக்குள்ளே சாஸ்திர விற்பன்னர்கள் இருக்கிறார்கள்; கவிகள் இருக்கிறார்கள் என்று நம்மவரிலே சிலர் வெளியுலகத்தார் தெரிந்துகொள்ளும்படி செய்து வருகிறார்கள். இதற்குள்ளே தமிழ் வகுப்பு மற்ற ஹிந்துஸ்தானத்து வகுப்புக்களைக் காட்டிலும் குறைவுபட்டதென்று நம்முள்ளே சிலர் முரசடிக்கத் தொடங்குவது எனக்கு நகைப்புண்டாக்குகிறது.

என்னுடைய சொந்த அபிப்பிராயத்தைக் கொஞ்சம் சொல்லி விடுகிறேன்.

உலகத்திலுள்ள ஜாதியார்களிலே ஹிந்து ஜாதி அறிவுத் திறமையில் மேம்பட்டது. இந்த ஹிந்து ஜாதிக்குத் தமிழராகிய நாம் சிகரம்போல் விளங்குகிறோம். எனக்கு நாலைந்து பாஷைகளிலே பழக்கமுண்டு. இவற்றிலே தமிழைப்போல வலிமையும், திறமையும், உள்ளத் தொடர்பும் உடைய பாஷை வேறொன்றுமேயில்லை.

இந்த நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவு, கீர்த்தி வெளியுலகத்திலே பரவாமல் இருப்பதை நான் அறிவேன். போன நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவொளி சற்றே மங்கியிருந்ததையும் நானறிவேன். ஆனால் போன நிமிஷம் போய்த் தொலைந்தது இந்த நிமிஷம் ஸத்தியமில்லை. நாளை வரப்போது ஸத்யம். மிகவும் விரைவிலே தமிழின் ஒளி உலக முழுவதிலும் பரவாவிட்டால் என் பெயரை மாற்றி அழையுங்கள். அதுவரையில் இங்கு பண்டிதர்களாக இருப்போர் தமக்குத் தமிழ்ச் சொல் வராவிட்டால் வாயை மூடிக்கொண்டு வெறுமே இருக்கவேண்டும். தமிழைப் பிறர் இழிவாகக் கருதும்படியான வார்த்தைகள் சொல்லாதிருக்கவேண்டும். இவ்வளவுதான் என்னுடைய வேண்டுகோள்.

3-4-1916

◆◆